முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

—வார இதழ்—

முரசு 5 | 23-5-58 வெள்ளி | ஒலி 7

★ மறைந்தார் மாவீரர்! ★

திருவாரூர் மாநாட்டில்
சொல்லின் செல்வர்
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
ஆற்றிய சொற்பொழிவு.

வடவரும் கழகமும்!

தஞ்சை மாவட்ட மாநாடு உணர்ச்சியிலும், ஆர்வத்திலும், அழகிலும் மற்ற எல்லா மாநாடுகளையும் விட கலை எழுச்சியிலும், எதிர் பார்த்த அளவிற்கு மேலாக, ஊர் முழுவதுமே மாநாட்டுப் பந்தலில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய வகையில் நடைபெறுவது கண்டு மகிழ்கின்றேன்.

தஞ்சைத்தரணி கலையாட்டத்திற்குப் பெயர் பெற்றது. அதிலும் குறிப்பாக நமது அருமை நண்பர் கருணாநிதி அவர்களுடைய கைவண்ணத்தை இங்கே பந்தலிலே தொங்கிக்கொண்டிருக்கும் வாழைக் குலைகளிலிருந்து, வெளியிலே அன்பர்கள் கூடுவதைவிட அழகும் அன்பும் ததும்ப "வருக! வருக!" என்று அழைத்துக் கொண்டிருக்கின்ற வண்ண வளைவுகள் வரையில் கண்டு உள்ளபடியே பெருமித மடைந்தேன்; பெரு மகிழ்ச்சி கொண்டேன்.

நம்முடைய கழகத்தின் நற்பணி தமிழ் நாட்டிலே மிகச் சீரிய முறையிலே—பலத்த எதிர்ப்புகளுக்கு இடையிலே—மிக வெற்றிகரமான நிலையில் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்மைப் பற்றி தவறான எண்ணங்கள் இருந்த நிலை மாறி, அப்படி எவருமே தவறாகப் பேச முடியாத சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

பேசுகிறார்கள்—ஆனால் பேசுகின்றவர்கள், தமிழ் நாட்டிலே ஒரு தபபெண்ணத்தை உண்டுபண்ண முடியும் என்ற நம்பிக்கையை இழந்து, வடக்கேயுள்ளவர்களுக்கு ஒரு தவறான நிலையைக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் பேசுகிறார்கள். அதைத் தவிர, இனி தமிழ் மக்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி பிரித்துக் கூறி தப்ப முடியும் என்ற எண்ணம் நம்முடைய எதிரிகளுக்கே கூட போய் விட்டது.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரையில் நம்முடைய கழகத்தைப் பற்றி பலவிதமாக மனமறிந்து பொய் பேசி வந்தார்கள். அத்தனைக்கும் காரணம், தமிழ் நாட்டு மக்களிடத்திலே இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி தவறான செய்திகளைக் கூறி அழித்து ஒழித்துவிட முடியும் என்று கருதினார்கள். கருதியதற்கும் காரணம் இருந்தது. அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவதைப் போல் திராவிட முன்னேற்றக் கழகம் மிக அண்மையிலே தோற்றுவிக்கப்பட்டது; மிகச் சாமான்யர்களினால் தோற்றுவிக்கப்பட்டது! தோன்றிய நேரத்தில் அந்தக் குழந்தையை வாழ்த்துவதற்கு தமிழ் நாட்டு அரசியலிலே, பொது வாழ்விலே சம்பிரதாயத்திற்குக்கூட ஒருவர் இடைக்கவில்லை. அத்தனை பேரும் முகம் சுளித்து மிக அலட்சியமாகப் பார்த்தார்கள். வெறுப்பாகப் பேசிக் கொண்டார்கள். இது இன்னும் எத்தனை நாளைக்குத் தாங்கும் என்று அவர்கள் பேசிக்கொண்டது நமக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது.

நாம் எந்தக் கழகத்திலே இருந்து வந்தோமோ—அந்தக் கழகத்தினுடைய தலைவரும், தோழர்களும் மனத் தாங்கல் அடைந்ததிலே ஆச்சரியம் இல்லை. ஆனால், அந்தக் கழகத்திற்குப் பெரும் வைரிகள் என சொல்லிக்கொண்டிருந்தவர்கள் கூட திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடாது என்பதற்காக அவர்களுக்கே பக்க மேளம் அடித்ததை நாம் மறந்துவிட முடியாது.

இத்தனைக்கும் என்ன காரணம்? புதிய கழகம் என்பது மட்டுமல்ல; அரசியலிலே அனுபவமிக்கவர்களாய் இருக்கின்ற மாற்றுக்கட்சித் தலைவர்கள் பல பேர் இக்கழகம் முளையிலேயே கிள்ளியெறியப்படாவிட்டால் நிச்சயமாக வலிவுபெற்று, இந்த நாட்டிலே நிலைபெற்றிருக்கிற காங்கிரஸ் ஆட்சியினுடைய இடத்தில்-காங்கிரஸ் ஆட்சி தளர்ந்தால் இடம் பிடிக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற வேறு அரசியல் கட்சிகளுடைய இடத்தைப் பிடித்துக் கொள்ளும் என்ற அச்சம் அவர்களுக்கு வந்த காரணத்தால் தான் அத்தனை பேரும்சேர்ந்து நம்மைத் தாறுமாறாகப் பேசினார்கள். அழித்து, ஒழித்துவிடலாம் என்ற ஆயத்தங்களிலே ஈடுபட்டார்கள். இத்தனைக்கும் இடையில் கையிலே ஏதுமின்றி, மனதிலே இருக்கின்ற தூய்மை ஒன்றே நம்மை இந்த நாட்டு மக்களுக்கு யார் என்று அறிமுகப்படுத்தி வைத்தது.

எதிரிகள் நம்மீது காட்டிக் கொண்டிருந்த அலட்சியத்தை ஆத்திரமாக மாற்றிக் கொண்டார்கள். கூட்டங்களிலே கலகம் செய்வதிலேயிருந்து, மாநாடுகளிலே குறும்புகள் செய்வதுவரை மிகக் கேவலமான காரியங்கள் அத்தனையிலுமே ஈடுபட்டுப் பார்த்தன.

அதோடு கூட, அவையிலே அமர்ந்திருந்த காங்கிரஸ் ஆட்சி—அது குமாரசாமி ராஜாவினுடைய ஆட்சியாக இருந்தாலும் சரி; ஓமந்தூர் ராமசாமி, ஆச்சாரியார், அல்லது காமராசர்-இப்படி யாருடைய ஆட்சியாக இருந்தாலும்; மந்திரி சபை எப்படி மாறினாலும் சரி; திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிக்க வேண்டும்என்ற மந்திரி சபையினுடைய எண்ணம் மட்டும் அன்றிலிருந்து இன்றுவரையிலே இருந்திருக்கிறது என்பது மட்டுமல்ல; நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டும் வந்திருக்கிறது. நான் ஏன் அதைத் தனியாக எடுத்துரைக்கிறேன் என்றால், அவர்கள் எண்ணுகிறவர்கள் மட்டுமல்ல; காரிய மாற்றக் கூடிய அதிகாரத்தைப் படைத்தவர்கள்!

நல்ல காரியத்தைச் செய்ய முடியும்; அதைச் செய்ய முடியாமல் அவர்கள் திணறுகிறார்கள் — நாம் அறிகிறோம். ஆனால், கெட்ட காரியத்தையும் அவர்கள் செய்ய முடியும்; அதை நாள்தோறும் செய்துகொண்டு வருகிறார்கள்—நாம் பார்க்கிறோம்!

அடக்குமுறை பல்வேறு ரூபங்களிலே அவிழ்த்துவிடப்பட்டது! சிறை பிடிப்பது; துப்பாக்கியால் சுடுவது; தடியால் தாறுமாறாக அடிப்பது; இழிவான 'செக்ஷன்'களில் வழக்குத் தொடுப்பது—இப்படி அடக்குமுறை அத்தியாயங்கள் அத்தனையையும் புரட்டிப் புரட்டி நம்மீது செலுத்திப் பார்த்தார்கள்.



ஒருபுறம் அடக்குமுறை; மற்றொரு புறம் இந்த நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளின் கட்டுப்பாடான விஷமப் பிரச்சாரம்; இன்னொரு புறத்திலே நம்மைத் திட்டவேண்டுமென்ற எண்ணத்திலே நுழைந்த பேச்சாளர்கள்—இவைகளுக்கு மத்தியிலே திராவிட முன்னேற்றக் கழகம், எழிலோடும், வலிவோடும் விளங்கி வருவதைக் கண்டு உள்ளபடியே பெருமிதம் கொள்கிறோம்.

வடநாட்டில் கழகம் என்ற பெயரை இன்னமும் பல பேரால் உச்சரிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் தமிழுக்கே உரிய சிறப்பு "ழ"கரம் அந்த சொல்லிலே இருப்பதுதான். அவர்கள் பேச முயற்சித்தால் 'கஜகம்' என்றுதான் முடிகிறது. இதுவும் ஓராண்டுக்குள் தான் சொல்ல முயற்சித்திருக்கிறார்கள். முன்பு அரசியலிலே ஈடுபட்டிருக்கின்ற சில தலைவர்களுக்கு மட்டும் நம்முடைய இயக்கத்தைப்பற்றி எப்படித் தெரியும் என்றால், "நாயக்கரது பார்ட்டி" என்றுதான் தெரியும்!

இன்றைய தினமோ மிகச் சிரமப்பட்டு, வீட்டிலேகூட பலமுறை ஒத்திகை பார்த்துவிட்டு, பார்லிமெண்டிலேயே பேசுகிறார்கள், 'திராவிடா முன்னேற்ற — கஜகம்' என்று! அதைக் கேட்கும்பொழுது உள்ளபடியே எனக்கு உணர்ச்சிப் பொங்கிக்கொண்டு வரும்!

காரணம், நம்முடைய மாற்றார் நம்முடைய பெயரையே உச்சரிக்க வேண்டிய அவசியம் வருவதற்கு முன்பே, இந்தக் கழகம் செத்துப் போய்விடும் என்று கருதிக்கொண்டிருந்தவர்கள், இன்றைய தினம் இந்தக் கழகத்தின் பெயரைச் சொல்லித் தீர வேண்டிய அவசியத்திற்கு மட்டுமல்ல; இந்த கழகத்தின் நடவடிக்கைபற்றி மக்கள் மத்தியில் ஒரு விளக்கம் சொல்லுவதற்கும், இந்தக் கழகத்தினுடைய கொள்கைகள் தவறானது என்று நிரூபிக்கின்ற பெரும் பொறுப்பு-பெரும்பாரம் தங்களுக்கு இருக்கிறது என்பதை உணரத் தக்க நிலைக்கு வந்திருக்கிறார்கள்!

நம்முடைய திராவிட நாடு திராவிடருக்கே என்ற கோரிக்கையை அவர்கள் சிறிது தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் பல பேர் ஒன்றுபட்டுவிட்ட இந்தியாவிலிருந்து திராவிடம் பிரியவேண்டும்; உடைத்துக் கொண்டு போக வேண்டும்; பிய்த்துக் கொண்டு, பிரிந்து போக வேண்டும் என்று நாம் சொல்வதாகக் கருதுகிறார்கள். அந்த எண்ணத்தை மாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கிருக்கிறது. அண்ணா அவர்கள் அதற்கு நல்ல விளக்கங்களை 'ஹோம் லேண்ட்' ஏட்டின் மூலம் தந்துவருகிறார்கள், "நாம் கேட்பது பிரிவினையல்ல; நம்முடைய இயக்கம் ஒரு விடுதலை இயக்கம்!" என்று.

நானும், அங்கு நண்பர்களிடத்தில் உரையாடிக்கொண்

[தொடர்ச்சி பக்கம்—5]

வெள்ளி 23-5-58 சென்னை

உயிர்போன உடல்!

ஹியூம் என்கிற வெள்ளைத் துரையினுல் ராஜவிசுவாசக் கட்சியாக, இந்தியர்களுக்கு உத்யோகம் வாங்கிக் கொடுப்பதற் கென்று துவங்கப்பட்ட காங்கிரஸ், இடையிலே 'வெள்ளையனே வெளியேறு'—என்ற கோஷம் எழுப்புகிற அளவுக்குப் புரட்சி இயக்க மாக மாறி; இறுதியில் ஒருநாள் இலட்சிய வெற்றி பெற்று; பின்னர் சோம்பேறிகளின் உறைவிடமாகவும் சுகபோகிகளின் இருப்பிட மாகவும் ஆகி; இப்போது அது தேபாது தலைமைக் காலத்தி லேயோ தகர்ந்து; தகனக் கிரியை செய்ய வேண்டிய நிலையை அடைந்துவிடுமோ—என்கிற ஐயப்பாடு அவர்கள் வட்டாரத்திற் குள்ளாகவே தோன்றிவிட்டது.

அதனுல்தான் பகிரங்கமாக அறிவிப்பு விடுத்து, புதுடில்லியிலே கட்சிக்குப் புத்துயிருட்டுவதாகக் கூறிக்கொண்டு கமிட்டி கூட்டி யிருக்கிருர்கள், அவர்கள்!

கட்சிக்குப் புது உயிர் ஊட்டுகிறேம்—என்று அறிவிக்கிருர்கள்; அதன் மூலம் கட்சியின் உயிர் போய்விட்டது என்பதைச் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிருர்கள்!

அந்தக் கூட்டத்திலே காங்கிரசுக்குப் புத்துயிர் ஊட்டுவதற் காக பதினைந்து அம்சங்கள் கொண்ட தீப்பொறி பறக்கும் திட்ட மொன்றைத் தீட்டியிருக்கிருர்கள்!

அந்த அறிக்கை, அமுல் நடத்தும் பொருட்டு எல்லா மாநிலங்க ளின் முதன் மந்திரிகளுக்கும், பிரதேசக் கமிட்டிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுமோம்.

அந்தத் திட்டத்தின் பதினைந்து அம்சங்களைக் கவனிக்கும் போது காங்கிரஸ் எந்தெந்தப் பதினைந்து முக்கியமான பணிகளை ஆற்றுமல் தவறியிருக்கிறது என்பதைப் பொதுமக்கள் அனைவரும் மிக நன்ருகப் புரிந்து கொள்ளலாம்!

அதிலே முதல் அம்சம் 'லட்சியங்களுக்கேற்ப அவற்றை அடை வதற்கான மார்க்கமும் தூயதாக இருக்க வேண்டும்' என்று வற் புறுத்துகிறது.

அதாவது, சோஷலிசபாணி என்பது அவர்களது உன்னத நோக்க மாக இருந்தாலும், அதை அடைய அவர்கள் தூய்மையான மார்க்கத் தைக் கடைப்பிடிப்பதற்கு தவறி விட்டார்கள்—என்பதைத்தான் இந்த வற்புறுத்தும் படலம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

இந்த முதல் அம்சத்தின் இரண்டாவது பகுதி, 'இந்திய அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள ஆசையான மதச் சார்பற்ற ஆட்சி முறை'யை வற்புறுத்துகிறது!

இதுவும் அப்படித்தான்; மதச் சார்பற்ற ஆட்சி முறையை காங் கிரஸ்காரர்களில் பலர் ஒத்துக்கொள்வதில்லை என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

இதற்குத் தக்கதோர் உதாரணமும் காட்ட முடியும்.

நேருவின் சொந்த மாநிலமும்; இந்திய உபகண்டத்தின் அரசியல் லகானைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பதுமான உத்தரப் பிர தேசத்தின் முதலமைச்சரான டாக்டர் சம்பூர்ணுனந்த் பழுத்த சனு தனவாதி; பச்சை இந்து மதப் பித்தர்!

அந்த மாநிலத்தில் ஜோசியம் போன்ற சாஸ்திரங்கள் வளர் வதற்காக அவர் அரசாங்கப் பணத்தையே தாராளமாகச் செலவு செய்து கொ[illegible]டிருக்கிருராம்!

அப்படிப்பட்டவர் இந்திய அரசியல் சட்டத்தில் தெரிவிக்கப்பட் டிருக்கும் ஆசையாம் மதச் சார்பற்ற அரசுபற்றி என்ன தெரியுமா கூறியிருக்கிருர்?

"அது ஒரு உபயோகப்படாத வரட்டுத் தத்துவம்!"

—இப்படி அவர் பொது மேடையிலேயே பிரசங்கம் செய்திருக் கிருர்!

—இதுவொன்றே போதும்; காங்கிரஸ் தீர்மானம் போட்டிருக்கும் பதினைந்து அம்சங்களும் இது நாள்வரை காங்கிரஸ்காரர்களால் ஒதுக்கப்பட்டிருந்த அம்சங்கள் என்பதை நிரூபிப்பதற்கு!

இதைப் போலவேதான் இதர அம்சங்களும்!

இன்னொரு அம்சம் 'ஜாதிப் பித்தைத் திட்டமிட்ட ரீதியில் தீரமுடன் எதிர்ப்பது அவசியம்'—என்று கூறி; இதுவரை காங்கிர சில் அந்தவித எதிர்ப்பு இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறது.

ஜாதி வெறியர்களும் மத வெறியர்களும் நிரம்பிய இடம் காங்கிரஸ் என்பதை யாருமே மறுக்க முடியாது.

உதாரணமாக, உத்தரப் பிரதேசத்தில் இந்துமத வெறியர்களி டம் ஆட்சி சிக்கியிருப்பதால், அங்கு முஸ்லீம்கள் கொடுமைப்படுத்தப் படுவது பிரசித்தமாக இருக்கிறது.

அந்த மாநிலத்திலே சென்ற ஆண்டு மட்டும் 400 'முன்சீபு'கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களாம். ஆனுல் அவர்களுள் ஒருவராவது முஸ்லீம் கிடையாதாம்!

—இந்தக் கொடுமையை பம்பாயிலிருந்து வெளிவரும் 'பிளிட்ஸ்' ஏடு வர்ணித்திருக்கிறது.

இனி அடுத்துவரும் 'அம்சங்களும்' காங்கிரஸ் செய்ய மறந்த; செய்ய முடியாத—சேவைகளைத்தான் உறுதிப்படுத்துகிறது.

"ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, எளிய வாழ்க்கை முறை களைப் பின்பற்ற வேண்டும்!"

—இதன் மூலம் எளிய வாழ்க்கை முறைகள் பின்பற்றப்பட வில்லை என்பதும்; ஆடம்பரச் செலவுகள் குறைக்க வேண்டிய அளவுக்கு அதிகமாக இருக்கிறது—என்பதும்தான் புலனுகிறது!

"சுற்றுப் பிரயாணத்தின்போது மந்திரிகள் மக்கள் பிரதிநிதிகளைச் சந்திக்கச் சிறிது நேரத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்!"

—இதனுல் சுற்றுப் பிரயாணத்தின்போது மந்திரிகள் மக்கள் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்வதில்லை—என்பது உறுதிப்படுத் தப்படுகிறது.

—இப்படியேதான் இந்தப் பதினைந்து அம்சங்களும்!

"இனிமேல் நான் பத்தினியாகத்தான் வாழ்க்கை நடத்து வேன்" —என்று ஒரு பெண் பகிரங்கமாக அறிவித்தால் அதற்கு என்ன அர்த்தம்?

'இதுவரை நான் பத்தினியாக வாழவில்லை'—என்கிற உண் மையை அந்தப் பெண் ஒத்துக்கொள்கிருள் என்பதுதானே?

அதுபோலத்தான்; காங்கிரசின் இந்தப் பதினைந்து அம்சத் திட்டமும் காங்கிரஸ் செய்யத் தவறிய பதினைந்து முக்கியத் துறை களைக் குறித்து; அந்தக் கட்சி தவறி விழுந்த தாறுமாருன பாதை யைக் காட்டுவதாக இருக்கிறது.

விபச்சாரிகள் ஒழுக்கமுள்ளவர்களாகக்கூட மாறிவிட முடியும்; ஆனுல் காங்கிரஸ்?

நாய் வாலை நிமிர்க்க முயன்ற கதைதான்! ஃ

நம்மைப்பற்றிப் பம்பாய் ஏடு!

"சென்னையில், இன்றைய காங்கிரஸ் ஆட்சிக்கு மிகவும் வலிமை வாய்ந்த எதிர்ப்பு, தன்னைப் பின்பற்று வோர்களால் வாஞ்சையோடு 'அண்ணு' (சகோதரர்) என்று அழைக்கப்படும் குள்ளமான வீரர் ஸ்ரீ அண்ணுதுரையிட மிருந்துதான் வருகிறது.

"இந்த அமைப்பு (தி. மு. க.) இவ்வளவு குறைந்த காலத்தில் எவ்வாறு இவ்வளவு அரசியல் செல்வாக்கைச் சாதிக்க முடிந்தது? இதற்குப் பதில் யுத்தப் பிரச்சாரம் போல் அவர்கள் கையாளும் சக்தி வாய்ந்த பிரச்சாரத்தில் தான் இருக்கிறது. தங்களுக்கு அனுகூலம் தரும் வகையில் மக்களைக் கவரும நல்ல சாதனங்களான நாடகம்; சினிமா; பத்திரிகை—ஆகியவற்றைச் சிறந்த முறையில் அவர்கள் பயன்படுத்தி வருகிருர்கள்.

"தி. மு. க. வின் திரைப்பட எழுத்தாளர்கள் நாட்டின் இந்தப் பகுதியில் உள்ளவர்களிலேயே மிக அதிகம் புகழ் பெற்ற எழுத்தாளர்களாவார்கள்; அநேகமாக அவர்கள் படங்கள் எலலாமே வெற்றிப் படங்களாகும்.

"ஸ்ரீ அண்ணுதுரையும், மு. கருணுநிதியும் தமிழ் நாட் டின் தலைசிறந்த திரைக் கதை-வசனகர்த்தாக்கள்; அதனுல் அவர்கள், படங்களை தங்கள் கட்சிப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சுதந்தரம் பெற்றவர்களாக இருக்கிருர்கள். வெற்றிப் படங்களான ஓர் இரவு; வேலைக் காரி; சொர்க்க வாசல்; ரங்கோன் ராதா—போன்றவைகள் சிறந்த திரைப்படக் கலையின் செழுமைக்குத் தக்கதோர் உதாரணங்களாகவும்; பிரச்சாரத்தைப் பொறுத்த வரை யிலும் கலைப் பொறுத்த வரையிலும் நிகரற்றவைகளாக வும் திகழ்கின்றன."

—"கரண்ட்" (14—5—58)

வளமுண்டு; வகையுண்டு; ஆகவே தனியரசுக்கு வழி காண்போம்!

திருவாரூர் மாநாட்டில் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் ஆற்றிய உரை

திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு பொலிவோடும், வலிவோடும் வளர்ந்து, காட்சியாகவும் மாட்சியாகவும் விளங்கி வருகிறது என்பதை இந்த மாநாடு ஒன்றே நாட்டுக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது.

நேற்றைய தினம் மிகச் சிறப்பான ஊர்வலத்தையும் நடத்திக் காட்டி, இயக்க வரலாற்றிலே ஒரு நல்ல நிகழ்ச்சியைச் சேர்த்தீர்கள். ஊர்வலத்தின் இடையிலேயே திருவாரூரின் அருமைத் தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரிய கருத்துக்களை நல்ல முறையில் பரப்புவதற்கு, பாசறை ஒன்றை அமைக்க — கழகக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக—கல் நாட்டும் பணியை எனக்களித்தார்கள். நான் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன், ஏறத்தாழ 2.500 ரூபாய் பொறுமானமுள்ள அந்த மனையை நண்பர் கருணாநிதி அவர்கள் கழகத்திற்கு அளிக்க முன் வந்திருக்கிறார். மேலும் அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கின்ற குழுவுக்குத் தலைவராகவும் அவர் பொறுப்பேற்றிருக்கிறார்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது நன்றியையும் மகிழ்ச்சியையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நமது கூட்டங்களைத் தவிர்த்து, வேறு எந்தக் கூட்டத்தை நாம் பார்த்தாலும், எந்த 'அகில உலக' ரீதிக்காரர்களின் கூட்டமாக இருந்தாலும் சரி; 'அகில இந்திய' வாதிகளுடைய கூட்டமானாலும் சரி; காந்தியார் பிறந்த நாள், இறந்த நாள், அவர் சிலை திறப்பு விழா, கண்காட்சித் திறப்பு விழா—எதுவாக இருந்தாலும் சரி; நம்மைப் பற்றி 'மூக்காலே மூன்று விச' நேரம் அர்ச்சனை புரிந்தால்தான் தங்கள் மன எரிச்சல் அடங்கும் என்று ஏசி வருகிறார்கள், மற்ற கட்சித் தோழர்கள். ஆனால் அவர்களே தான் முன்பு நம்மை அலட்சியப்படுத்துவதின் மூலம் அழித்து விடலாம் என்றும் கருதினார்கள். இன்று அந்த முறை பலனளிக்கவில்லை! ஆகவேதான் இழித்தும் பழித்தும், தூற்றியும் ஏசியும், தாறுமாறாகப் பேசியும் மக்களுடைய கவனத்தைப் பாழாக்கலாம் என்று கருதுகிறார்கள்!

ஆனால், பந்து அடிக்க அடிக்க மேலே மேலே எழும்புவது போல், பூனை தாக்கத் தாக்க புலியாக மாறுவதுபோல், சந்தனம் அரைக்க அரைக்க மணப்பதுபோல், செம்பொன் சுடச் சுட ஒளி வீசுவதுபோல், வைரம் தீட்டத் தீட்ட ஜொலிப்பதுபோல்—திராவிட முன்னேற்றக் கழகம் குப்பைச் சொற்களால் தூற்றப்பட தூற்றப்பட மேலும் மேலும் சீருடனும் சிறப்புடனும் வளர்ந்து கொண்டே போகிறது!

குப்பையிலே தூக்கி எறிந்து விடுவதின் காரணமாக கழகம் ஒழிந்து விடும் என்று கருதுகிறார்கள். குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணி குண்டுமணிதான்! அந்தக் குண்டுமணியை சேற்றிலே அழுத்தினாலும், குப்பையிலே போட்டாலும் கூளங்களுக்கு இடையிலே எறிந்தாலும் அது கெட்டு விடாது! அதிலே சேறு ஒட்டாது; சகதி ஒட்டாது; குப்பை ஒட்டாது; தூசுகள் ஒட்டாது; அதனால்தான் சொன்னார்கள், குப்பையிலே குண்டுமணி கிடந்தாலும் குண்டுமணி குண்டுமணிதான் என்று! குண்டுமணியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியினுடைய அடையாளம் தான்!

மாற்றுக் கட்சித் தோழர்கள் ஏசினாலும், தூற்றினாலும், அந்தக் குண்டுமணிக்கு எடைக்கு எடை பவுன் மட்டுமேதான் நிற்குமே தவிர, வேறு எதுவும் நிற்காது!

பாசறையிலே கூடுகின்ற வீரர்கள் பழுதுபட்ட கருவிகளைப் புதுப்பித்துக் கொள்வார்கள். புதுக் கருவிகளை ஏந்தி களத்திலே குதிப்பார்கள். அது போலவேதான் நீங்கள் இந்த மாநாட்டிலே கூடியிருக்கிறீர்கள்.

உலகத்திலே இருக்கின்ற சின்னஞ்சிறு நாடுகளுக்கு உள்ள வசதிகளிலே எந்த வசதி குறைவுடையதாக இருக்கிறது, நாம் கேட்கிற திராவிடம்? எந்த வகையிலும் குறைவில்லாத—பிணைக்கப்பட்ட ஒரு பரந்த நாட்டைத்தான் நாம் விடுவிக்க விரும்புகிறோம்! தவிர, நாம் கேட்பது பிரிவினை அல்ல; நாம் கேட்பது விடுதலையாகும்!

இந்த நாடு தன்னந் தனியாக இருந்தது என்பதற்கு சான்றுகளை வரலாற்று ஏடுகள் நல்ல முறையிலே எடுத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

பண்டித நேரு முதல் எந்த வடநாட்டுத் தலைவர் தென்னாட்டுக்கு வந்தாலும், பேசுகின்ற அத்தனை கூட்டங்களிலேயும் அகில இந்திய ஒற்றுமையினுடைய மேன்மையையும், அதனுடைய பெருமையையும் பேச வேண்டிய அவசியத்திறகு வந்துவிட்டார்கள். அவர்கள் அகில இந்திய ஒற்றுமையைப் பேசுகிறார்கள். நாமோ, ஒன்றாக இந்தியா இருந்ததல்ல; ஒன்றாக வளர்ந்ததல்ல—என்று வாதிடுகிறோம், ஆதாரங்களின் மூலம்!

இந்தியா உலகம் தோன்றிய நாட்களிலிருந்து ஒன்றாக இருந்தது போலவும், ஒன்றாக வளர்ந்த நாடு போலவும், ஒன்றாக உறுதிபெற்ற நாடு போலவும், இதை இரண்டாக வெட்டிப் பிரிக்க நாம் விரும்புவது போலவும் நாட்டு மக்களிடத்திலே தவறாக எடுத்துக் கூறி வருகிறார்கள்.

அலெக்சாண்டர் படை படையெடுத்தபோது, இந்தியா ஒன்றா? மேனாண்டர் வந்தபோது, செலியூகஸ் நிகோட்டர் நுழைந்தபோது, செங்கிஸ்கான் வந்தபோது, மெகஸ்தனிஸ் நுழைந்தபோது, தைமூர் படையெடுத்தபோது, பாபரின் சேனை நுழைந்த போது, கோரி வந்தபோது, கஜனி முகமது 17 முறை படையெடுத்த போது, போர்த்துக்கீசியர் வந்திறங்கியபோது, டச்சுக்காரர்கள் நுழைந்தபோது, பிரஞ்சுக்காரர்கள் அடியெடுத்து வைத்தபோது, ஆங்கிலேயர் இங்கே கோட்டைகளைக் கட்டிக் கொண்டு ஆளத் தொடங்கிய காலம் வரையில் இந்தியா என்பது ஒன்று—என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே நாம் கேட்டிருக்கிறோம்.

இந்த நாட்டை சேர சோழ பாண்டியர்கள், குறு நில மன்னர்கள்தான் ஆண்டிருக்கிறார்கள். அவ்வளவு பெரிய அசோக மன்னன் நெல்லூர் வரையிலும் தான் வர முடிந்தது! ஹர்ஷ சாம்ராஜ்யம் விந்தியத்திற்குப் பக்கத்திலேதான்! ஔரங்கசீப்பின் ராஜ்யமும் அப்படித்தான்! அக்பர் சாம்ராஜ்யமும் தெற்கே நீண்டது கிடையாது!

அகில இந்திய பிணைப்புபற்றிப் பேசுகிறார்களே; அந்த ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு மதமா? அப்படியானால் ஒரே கிருத்துவ மதத்தைக் கொண்ட ஐரோப்பா 32 பிளவுகளாகப் பிரிந்து கிடப்பானேன்?

நாற்பத்தைந்து இலட்சம் மக்களைக்கொண்ட சுவிட்சர்லாந்து தனி நாடாக வாழ்கிறது! ஆனால் கடல் கிடையாது. நாம் கேட்கிற திராவிடத்திற்கு மூன்று புறமும் கடல் உண்டு!

நார்வே, ஸ்விடனுக்கு பக்கத்திலே உள்ள கடல் வருடத்தில் ஆறு மாதங்கள் பனிக் கட்டியாக உறைந்து கிடக்கும். கப்பல்களும் நின்றுவிடும். அந்த நாடுகள் இரண்டும்கூட இன்று தனியாகத்தான் வாழுகின்றன.

லக்சம்பர்க் மூன்றே மூன்று இலட்சம் மக்களைக் கொண்ட நாடு—தனியாக வாழ்கிறது! அகில உலக பிரச்சினைகளில் யோசனை சொல்கிற அளவுக்கு ஐக்கிய நாட்டுச் சபையிலே இடம் பெற்றிருக்கிறது!

ஆனால் நமது சென்னையின் ஜனத்தொகை மட்டும் கிட்டத்தட்ட பதினெட்டு இலட்சத்துக்கு மதிப்பிடுகிறார்கள்; தமிழகத்து மக்கள் எண்ணிக்கை மூன்று கோடி; திராவிடத்து மக்கள் எண்ணிக்கை ஒன்பதரை கோடி! எந்த வகையிலே குறைவுடையது திராவிடம்?

இரும்பே இல்லாத ஜப்பான் தனி நாடு! அது இன்று அகில உலகத்துக்குத் தேவையான என்ஜின்களை — இயந்திரங்களை அமெரிக்காவைப் போல, பிரிட்டனைப்போல் செய்து அனுப்புகிறது!

பருத்தியே விளையாத பிரிட்டன், உலகப் பிரசித்திபெற்ற லங்காஷையர் துணிகளைசெய்து உலகமெல்லாம் அனுப்புகிறது!

வெறும் ஊசியிலைக் காடுகளை மட்டுமே கொண்டிருக்கிற

[தொடர்ச்சி பக்கம்—12]



நமது வரலாற்றை மறைத்தனர்; நாசக் கருத்தை வளர்த்தனர்!

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

டிருக்கும்போதெல்லாம் இதைத்தான் உணர்த்துகிறேன். அப்போதுதான் அவர்களுக்கு இந்தியாவின் வரலாறே நினைவிற்கு வருகிறது.

அவர்கள் இந்தியாவினுடைய வரலாறு காந்தியார் காங்கிரசில் நுழைந்ததற்குப் பிறகுதான் ஆரம்பித்தது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நினைவிலே இன்று இருப்பதெல்லாம், அதிகாரம் அசைக்க முடியாத நிலையில் காங்கிரஸ்காரர்களுடைய கரத்திலே இருக்கிறது என்பது ஒன்றேதான். ஆகவேதான் இந்த நாடு வெள்ளைக்காரன் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது; மொகலாயர்களுக்கு முன்பு எப்படி இருந்தது; ஆயிரம் ஆயிரத்தைநூறு ஆண்டுகளுக்கு முன்னால் எந்த வகையான அரசுகளைக் கொண்டிருந்தது—என்பதையெல்லாம் நாம் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

மற்றொன்று, இன்று இந்தியாவினுடைய சரித்திரம் என்ற பெயரால், வட இந்தியாவினுடைய சரித்திரம்தான் பாடப் புத்தகங்கள் முழுவதும் பரவிக் கிடப்பதைப் பார்க்கிறோம்.

ஆகவே, தென்னிந்தியா இருப்பதாகவே அவர்களுக்கு நினைவில்லை! தென்னிந்தியாவுக்கு ஒரு வரலாறு இருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை! அந்த வரலாற்றினுடைய தொன்மை சிறப்பு வாய்ந்தது; உலகம் கண்டு வியக்கத்தக்க நாகரீகத்திற்குச் சொந்தமானது...என்ற அரிய உண்மைகளை அவர்களுக்கு நம்மைப் போன்றோர் எடுத்துரைத்தாலன்றி தெரிவதற்கு மார்க்கமில்லை!

அதனால்தான் இந்த வாய்ப்புக் கேடுகளுக்கு மத்தியிலே நாம் நம்முடைய இலட்சியமான திராவிடநாடு திராவிடருக்கே என்ற அரிய குரலை எழுப்பும்போது பல சிரமங்களை சமாளித்துத் தீரவேண்டும். ஏராளமான ஆற்றல் நம்மிடம் உண்டு. நம்மைச் சார்ந்தவர்கள் யாரும் இந்தக் கொள்கைகளை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாணியில் தமிழிலே பேசினாலும் சரி; தெலுங்கிலே, கன்னடத்திலே, மலையாளத்திலே, ஆங்கிலத்திலே—இப்படி வேறு எந்த மொழிகளிலே பேசினாலும் சரி; அந்த மொழியினுடைய பேச்சுக்கலையிலே ஒரு புதிய பாணியை ஏற்படுத்துவதைக் கண்டிருக்கிறோம்.

அதற்குக் காரணம், நம்முடைய கொள்கைகளிலே கொண்டிருக்கின்ற வலிவும், விளைவு பற்றிக் கவலைப்படாமல், அஞ்சாமல் எடுத்துரைக்கின்ற ஆற்றலும்தான்!

இவைகளை நாம் வைத்துக் கொண்டு வடக்கே யிருக்கிற மூடுபனியை நம்மால் விலக்க முடியும்! நம்முடைய கொள்கையின் விளக்கம்—லட்சியக் குரல் வடக்கு நோக்கி ஒலித்தால் வெகு விரைவில் வடநாட்டு சுயநல மக்களிடத்திலேயும் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக இருக்கிறது.

இன்றைய தினம் வடக்கே நாங்கள் இருவரே சென்றுள்ளோம். 505 பேர் இருக்கின்ற சபையில் இது மிகச் சாமான்யமான எண்ணிக்கைதான்!

இவ்வளவு பலகீனம் இருந்தாலும் நமக்கிருக்கிற ஒரே பலம்—நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் அந்த ஆவலோடு கூட அருவருப்பும் இருக்கிறது. அதையும் உணருகிறேன்—அது இயற்கையுமகூட.

இன்றைய தினம் வடநாட்டு அரசியலிலே, வெளித் தோற்றத்திலே பளபளப்பும், உள்ளே செல்லரித்துப் போன நிலையிலும் உள்ள காங்கிரஸ் கட்சி ஒருபுறத்திலே இருக்கிறது. அதைச் சுற்றிலும் வடக்கே இருக்கின்ற அகில இந்தியக் கட்சிகள்! ஆனாலும் அத்தனை அகில இந்திய கட்சிகளுக்கும் இன்றைக்குப் பெரிய இலட்சியக் கண்ணோட்டம் இருப்பதாக நான் நம்பத் தயாராக இல்லை. அவையனைத்தும் வெகு விரைவில் காங்கிரஸ் வீழும் என்று தெரிந்து கொண்டு, விழுந்தால் காலியாகும் இடத்தில் எப்படி முந்திக் கொண்டு உட்காருவது என்ற நோக்கத்தோடு இருக்கின்ற கட்சிகளே தவிர, மக்களின் பிரச்சினைகளில் உள்ளபடியே நாட்டம் செலுத்துபவை அல்ல; பரிதாபத்துக்குரிய கம்யூனிஸ்ட் கட்சி உட்பட!

அமிர்தசரசிலே அவர்கள் கூடிய காங்கிரசில் பல்வேறு வகையான தீர்மானங்கள் போட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் கூறி வந்த கருத்துக்கள் தவறானவை என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் ஆழ்ந்து சிந்தித்து, அலசிப் பார்த்து, அனுபவத்தை முன் வைத்து யோசித்தால், அவர்கள் அவைகளை இதயப்பூர்வமாகப் பேசுகிறார்கள் என்று ஒத்துக் கொள்ள முடியாது. நேரு விலகினால்—காங்கிரஸ் தகர்ந்தால் அந்த இடத்திலே அமர எங்களுக்குத் தகுதி இருக்கிறது என்று காட்டிக் கொள்ளவேதான் விரும்புகிறார்கள்!

அதேபோல், அங்கிருக்கிற அடுத்த பெரிய கட்சி பிரஜா சோஷலிஸ்ட் கட்சி—கிருபளானியின் தலைமையிலே பாராளுமன்றத்தில் இயங்கி வருகின்ற கட்சி! அவர்கள் தாங்கள்தான் காங்கிரசிற்கு மாற்று—காங்கிரசின்மீது மக்களுக்கு ஆத்திரமோ சலிப்போ ஏற்பட்டால் அடுத்து விரும்புவது தங்களைத்தான் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள்! அப்படி விரும்புபவர்கள் என்று நம்பா விட்டாலும், விரும்பத் தக்க வகையிலே விளங்க வேண்டும் என்பதிலே அன்றாடம் கவனம் செலுத்துபவர்கள்! கொள்கைகளைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை; காங்கிரஸ் அசைந்தால் எப்படி எகிறிப் போய் அந்த இடத்தில் அமர்வது என்று நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தது லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சி! அதிலே இன்று ஏற்பட்டிருக்கின்ற பிளவுகளும், விரிசல்களும் அநேகம்! தெற்கேயிருந்து சென்றிருக்கிற பி. வி. ஜி. ராஜு, அந்தோணிப் பிள்ளை இருவரும் கட்சியிலே சலசலப்பு உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், நாம் துண்டு துண்டாக இருந்தால், காங்கிரஸ் ஆட்சி காலியாகும்போது அந்த இடத்தைப் பிடிக்க முடியாது; ஆகவே பிரஜா சோஷலிஸ்ட் கட்சியுடன் எப்படியாவது ஒன்றுபட்டு அந்த ஆசையை அடையவதோடு, கம்யூனிஸ்டுகளை நுழைய விடக்கூடாது என்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தது, ஜன சங்கம்—அதாவது இந்து மகா சபை! இந்தியாவுக்கு எதிர்ப்பு பாகிஸ்தான்; அது முஸ்லீம்களின் நாடு; நாம் வசிப்பது இந்துக்களின் நாடு—என்று சொல்லி, இரண்டுக்கும் வெறியைக் கிளப்பி, பகையை மூட்டி, காங்கிரஸின் இடத்தைப் பிடித்து விடலாம் என்பது அதன் நினைவு!

நான் இவைகளை எதற்குக் குறிப்பிடுகிறேன் என்றால், அங்கிருக்கின்ற எல்லா கட்சிகளுக்கும் இன்றைய நோக்கம் பதவி சிம்மாசனத்தின் மேல் இருக்கிறதே தவிர, மக்களின் உள்ளங்களிலே எழுகின்ற எண்ணங்கள் என்ன; புதிய தேவைகள் என்ன; குறைகள் என்ன; மொழியைப் பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள்; மாநிலப் பிரிவினையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்; பொருளாதாரத் துறையிலே என்ன மாற்றங்கள் விளைய வேண்டும் என்று விரும்புகிறார்கள்—என்பதை கவனிக்க மனமின்றி—அரண்மனைக்கு வெளியிலே இருக்கின்ற அலங்கோலங்களைப் பற்றி துளியும் எண்ணாமல் இருக்கிறார்கள்!

பல நண்பர்கள் என்னிடம் கேட்பார்கள், "நீங்கள் என்ன; நாடே பிரிய வேண்டும் என்று கேட்கிறீர்களாமே. மெய்தானா மிஸ்டர் சம்பத்?" என்று.

"ஆமாம்! பிரிய வேண்டுமென்று சொல்லவில்லை; நாங்கள் விடுபட வேண்டும் — விடுதலை பெற வேண்டும் என்று சொல்லுகிறோம்!" என்று நான் பதில் தருவேன்.

வேடிக்கையாகப் பேச ஆரம்பித்தவர்கள் உட்கார்ந்து விவாதிக்கத் தொடங்குகிற நேரத்தில் "இப்போது இருக்கிற போக்கிற்கு அது ஒத்து வருமா?" என்று கேட்பார்கள்.

நாட்டிலே அரசியல் துறையானாலும், பொருளாதாரத் துறையானாலும், ஏதாவதொரு போக்கு இருக்கத்தான் செய்யும். ஆனால் நாட்டு மக்களின் நலனிலே அக்கரை படைத்த அரசியல் கட்சிகள், பொதுநல அமைப்புகள் இருக்கின்ற போக்கிற்கு ஒத்தப் போக்கிலே கவனத்தைச் செலவிட்டால் அதிலே அர்த்தமில்லை; இருக்கின்ற போக்கு, மக்களின் ஒத்தப் போக்காக இருந்தால் அதை அவர்கள் வலுப்படுத்துவதிலே பொருள் உண்டு!

[தொடர்ச்சி பக்கம்—8]

தென்னார்காடு மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

1953, ஜூன் திங்கள் 7, 8 நாட்களில்
விருத்தாசலத்தில் நடைபெறும்.

★

தலைவர் :
மதுரை எஸ். முத்து

★

திறப்பாளர்:
கே. கே. நீலமேகம்

அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வர்.

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. வரவேற்புக் குழுத் தலைவர்.
எம். செல்வராஜ் எம்.எல்.ஏ. பொருளாளர்.

சி. முனுசாமி, ஜி. சொக்கலிங்கம், சி. நடராசன் எம்.எல்.ஏ.
எம். ஆனந்தன் எம்.எல்.ஏ. செயலாளர்கள்.

ரே. பிச்சமுத்து, பா. குப்புசாமி —தொ. ப. தலைவர்கள்.

பூஞ்சோலைக்கு அறவாழி சொன்ன கதை வியப்பை அளித்தது என்றாலும் அதில் நம்பிக்கை யில்லாமல் போய் விடவில்லை. அறவாழியின் முகமும், மென்மையான பேச்சும் அவளுக்கு அவனிடத்திலே அத்தகைய பற்றுதலையும் பாசத்தையும் ஏற்படுத்தி விட்டது.

பழமை எண்ணங்களுக்குப் பக்தி பூர்வமாகப் பணிவதற்குக் கற்றிருந்தாளே தவிர — பூஞ்சோலை; புதிய கருத்துக்களின் திக்கு நோக்கித் திரும்பியதும் கிடையாது. அத்தகைய மூதாட்டியை அறவாழியின் பேச்சு ஒரேயடியாகத் திருப்பி விடாவிட்டாலும், கரகமாடிக் கண்ணன் ஒரு ஏமாற்றுக்காரன் என்று தீர்மானிக்கிற அளவுக்கு உதவிற்று. மந்திர மாயங்களின் சக்திகள் எல்லாம் உண்மைதான்! ஆனால் கரகமாடிக் கண்ணன் தனக்கு அந்த சக்தியிருப்பதாக நடித்து மக்களை மயக்கி யிருக்கிறான் என்ற நிலைக்கே அவளால் இறங்கி வர முடிந்தது.

அறவாழியைக் கோயில் காளை ஏன் துரத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்ள அவள் மிக ஆவலாக இருந்தாள். அம்மாவைவிட மகளுக்கு அந்தக் கதையைக் கேட்பதிலே ஆர்வம் அதிகம்.

இருக்காதா என்ன! பண்பு கொண்ட ஒரு தாயின் உள்ளம் அறவாழியை அன்புக் கயிற்றால் பிணைக்கிறது. பொன்மணியின் இருதயமோ, வேறு எவரும் இருப்பதற்கு இடமின்றி அறவாழியை மட்டும் உள்ளே வைத்துமூடி தாமரை மொக்கு போலக் குவிந்து கொள்கிறது. அந்தச் செயல் மூலம் அவளுக்கோ எவ்வளவோ பெரிய ஆறுதல்! பெருமூச்சு! வெற்றி கண்டு விடடதாகவே ஒரு நினைவு! இன்பக் கனவு! ஏறகனவே ஒளியேறிய விழிகளில் மகிழ்ச்சிக் கண்ணீர் வேறு மெருகேற்றியது. அந்த விழிகளால் அவனை அணு அணுவாக விழுங்கி இதயத்தில் திணித்துக் கொண்டிருந்தாள்.

அவனும் அவளுக்கு முன்பாகத் தன் இதயத்தைத் திறந்து வைத்துக் கொண்டு கண்ணால் வரவேற்புத் தோரணங் கட்டி "வண்ணக் கிளியே! வருக! வருக!" என அழைத்துக் கொண்டிருந்தான்.

"தம்பி! அதெல்லாம் போகட்டும்—அவன் கிடக்கிறான் அந்த மோசக்காரக் கண்ணன்! உங்களைக் கோயில் காளை எப்படித் துரத்துச்சு? அதைச் சொல்லுங்க விபரமா!" என்று கேட்டு, அறவாழியின் சிந்தனையை உடனடியாகக் கலைத்தாள் பூஞ்சோலை.

"கண்ணன், என்னைப் பழி தீர்த்துக்கொள்ள செய்த ஏற்பாடுதான் அது!" என்று அறவாழி திட்டவட்டமாகக் கூறினான்.

"பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு நான் மட்டும் தெருவிலே வந்து கொண்டிருந்தேன் ...... பொழுது விடியும் நேரம்......ஒன்றிரண்டு சேவற் கோழிகள்கூட அவசரப்பட்டுக் கூவத் தொடங்கின. திடீரென எதிரே கண்ணன் வந்துகொண்டிருந்தான். நான் அவனைப் பார்த்த அதே சமயம் அவனும் என்னைப் பார்த்தான். 'வாருமய்யா, பகுத்தறிவு! வந்து சேர்ந்தீரா! சபாஷ்! சபாஷ்!' என்று உரக்கக் கத்தினான். நான் பதட்டமடையாமல் அப்படியே நின்று புன்னகை புரிந்தேன். என்னுடைய புன்சிரிப்பை அவன் பார்த்தானோ என்னமோ தெரியாது — நான் எதிர்பாராத நிலையில் என் தலையை நோக்கி ஓங்கி ஒரு குத்து விட்டான். கைகளில் பெட்டி படுக்கையிருந்த காரணத்தால் என்னால் உடனடியாக அதைத் தடுத்துக்கொள்ள முடியவில்லை. கைகளில் உள்ள பொருள்களைக் கீழே வைத்து விட்டு நான் எதிர்ப்பதற்குத் தயாராவதற்குள் மறுபடியும் ஒரு குத்து நெஞ்சிலே விழுந்தது.........."

இதைக் கேட்டதும் "அம்மாடி! என் தங்கம்!" என்று பூஞ்சோலை மன முருகினாள்.

பொன்மணியின் நெஞ்சிலே ஈட்டிகள் பாய்ந்தது போலிருந்தது...அறவாழியின் மார்பகத்தில் எவ்வளவு வேதனையிருக்குமோ—என எண்ணி நடுக்குற்றாள். அவனையறியாது அவள் கன்னங்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அறவாழி சண்டையை வர்ணிக்க ஆரம்பித்துவிட்டான்:

"நெஞ்சிலே குத்து விழுந்ததும் நிலை தடுமாறிவிட்டேன். இருந்தாலும் மூச்சைப் பிடித்துக் கொண்டு கண்ணனை எதிர்ப்பதற்குத் தயாரானேன். அவன் என்னோடு நேர்மையான சண்டைக்கு வரவில்லை. நான்

எதிர்க்கப்போகிறேன் எனக் கண்டதும் ஒரு பெரிய கருங் கல்லைக் கையிலே தூக்கிக் கொண்டு என் தலையை நோக்கி வீசுவதற்குக் குறி பார்த்தான். சுற்று முற்றும் பார்த்தேன். எனக்கு ஒரு ஆயுதமும் கிடைக்கவில்லை. அவனும் கல்லை என் மீது எறியவில்லை. குறி தவறிக் கீழே விழுந்துவிட்டால் விழுந்த கல்லை நான் எடுத்துக் கொள்வேன் என்ற பயம் போலும், அவனுக்கு! கல்லோடு என்னைத் துரத்தினான். நான் ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு மரத்தடிப் பக்கம் ஓடினேன். கோயில் காளை அங்கேதான் படுத்திருந்தது. அங்கே ஒரு சுமைதாங்கியில் யாரோ ஒரு ஆள் படுத்திருப்பது தெரிந்தது. அதைக் கண்ணனும் பார்த்துவிட்டான். திடீரெனக் கல்லை வெகு வேகமாக என்னை நோக்கி வீசினான். நான் குறியினின்றும் தப்பினேன். ஆனால் அந்தக் கல், காளையின்மீது விழுந்தது. காளை, ஒரு பெரிய சப்தத்துடன் துள்ளி யெழுந்தது. கண்ணன் பறந்துவிட்டான் அதை விட்டு. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். காளை என்மீது பாய்ந்தது ஓடினேன். ஓடினேன். தெருவிலே உருண்டேன். சுமைதாங்கியில் படுத்திருந்த ஆள் ஏதோ சப்தம் போட்டதுபோல் தெரிந்தது. என்ன ஒலியென்று தெளிவாகக் கேட்கவில்லை. காளை, தன்மீது கல் வீசியவன் நான்தான் என்று எண்ணிக் கொண்டு என்னை வெருட்டியது. அதற்குப் பிறகுதான் எல்லாம் உங்களுக்கே தெரியுமே!" என்று நிறுத்தினான் அறவாழி.

"சுமைதாங்கியில் படுத்திருந்தது யார் தெரியுமோ? நான்தான்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னான், சுருளிமலை.

"என்ன, நீயோ? அப்படியானால் ஏதோ சப்தம் போட்டாயே; அது என்ன?" எனக் கேட்டான் அறவாழி.

"விடாதே! கொல்லு! கொல்லு — என்று சப்தம் போட்டேன்" என்றுசாதாரணமாகச் சொன்னான் சுருளிமலை.

"அடப்பாவி! அப்படியா சத்தம் போட்டே?" என்று திட்டினாள் பூஞ்சோலை.

"பிறகென்னவாம் — யாரோ என் காளையைக் கடத்திச் செல்ல வந்திருக்கிறார்கள் என்று பயந்தேன் — அதனால் அப்படிச் சொன்னேன்!" என்று கூறிவிட்டு "கடைசியில் தான் காப்பாற்றிவிட்டேனே!" என்று பெருமையும்பட்டுக் கொண்டான் சுருளிமலை.

அறவாழி, சுருளிமலையை அன்பு ததும்ப நோககி, "காளை மாடு உனககு நெருங்கிய நண்பனோ?" என்று கேட்டான்.

"ஏன்? அது கேவலமா? மனுஷனோட சிநேகிதம் பண்றதை விட மாடுகளோடு சிநேகிதம் பண்றது எவ்வளவோ மேல்! நன்றி கெட்ட துரோகிகளோட பழகுறதைவிட நாய், கழுதை, குதிரை, மாடு, ஆடு, கோழி, இதுகளோட பழகலாம் என்பது என் அபிப்பிராயம்!"

சுருளிமலையின் பதில் அறவாழிக்குத் திகைப்பையும் நகைப்பையும உண்டாக்கியது.

"ஏதேது—பெரிய வேதாந்தி மாதிரி பேசுறியே..." என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அறிவாழி.

"இதுக்கு ஏன் வேதாந்தம் சித்தாந்தம் எலலாம்!...அனுபவம் போதாது...அனுபவம்?" என்றான் சுருளிமலை.

"அனுபவமா? உனக்கு இந்த வயதுககுள்ளே என்ன தம்பி அனுபவம் வந்தது?"

"அனுபவத்துக்கு வயசு முக்கியந்தான் — அதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் வயசானவங்களுக்குக் குழந்தைப் பிள்ளை அனுபவமும்—சின்னப் பிள்ளைகளுககு வயசானவங்க அனுபவமும் — இருக்கிறதிலே ஒரு ஆச்சரியமும் இல்லையே! நானும் கோயில் மாடு சிவாவும் ஏன் சிநேகிதம் ஆனோம்—எப்ப சிநேகிதம் ஆனோம்—தெரியுமா உங்களுக்கு?"

"எனக்கு எப்படித் தெரியும்? அனுபவஸ்தனான நீயே சொல்லேன்!"

"நீங்கள் இந்த ஊர்லதானே இருக்கப் போறீங்க...இன்னுங் கொஞ்ச நாள் கழித்துச் சொல்றேன்!"

"இதற்கு ஏன் தம்பி நாளை ஒத்திவைக்கிறாய்? சும்மா இப்பவே சொல்லு!"

"ஊஹூம் — இப்ப சொல்ல முடியாது! அப்பறம் சொல்றேன்!"— சுருளிமலை இதைக் கூறியவாறு, எழுந்து வேகமாக வீட்டைவிட்டு வெளியேறினான்.

அவன் போவதையே அறவாழி, கவனத்தோடு பார்த்துக்

கொண்டிருந்துவிட்டு, இறுதியில் பொன்மணியின் பக்கம் திரும்பினான். பொன்மணியை அந்த இடத்தில் காணவில்லை. அவள் எங்கே போய்விட்டாள் என்று அவன் நினைப்பதற்குள் கொல்லைத் தாழ்வாரத்துப் பக்கமிருந்து, "அம்மா! அம்மா! ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!" என்ற குரல் கேட்டது.

"அய்யோ! என்னடி பொன்மணி!" என்று பூஞ்சோலை ஓடினாள். கொல்லைப் பக்கம் போன பொன்னையாவுக்குத்தான் ஏதோ நேர்ந்துவிட்டது என்று பூஞ்சோலை நடுங்கினாள்.

நல்லவேளையாக அப்படி ஒன்றும் ஆகிவிடவில்லை. பொன்மணிக்குக் கை விரலில் தேள் கொட்டிவிட்டது! அடுப்புக்கு வரட்டி எடுக்கப் போயிருக்கிறாள்; அதிலிருந்து தேள் நன்றாக அவள் விரலைப் பதம் பார்த்துவிட்டது. பொன்மணி, துடித்தாள்; துவண்டாள்.

அறவாழியும் மெதுவாக எழுந்து கொல்லைத் தாழ்வாரத்திற்கு பரபரப்போடு வந்துவிட்டான்.

"அய்யோ! தேள் கொட்டிவிட்டதே பெண்ணுக்கு...நான் என்ன செய்வேன்..." என்று பூஞ்சோலை ஒப்பாரி வைத்தாள். ஊருக் கெல்லாம் வைத்தியம் செய்யப் போவாள்—தன் வீட்டிலேயே ஆபத்து என்றதும் எதிலும் புத்தி ஓடவில்லை அவளுக்கு.

தட்டுத் தடுமாறி அந்த இடத்திற்கு வந்து விட்ட பொன்னைய, "ஓடிப்போய் கண்ணனை அழைத்து வா — மந்திரம் போட்டு விஷத்தை இறக்கி விடுவான்!" என்று அவசரக் குரல் எழுப்பினார்.

"ஆமாம் கண்ணனுச்சு—மண்ணுச்சு! அவன் வேண்டாம்—அவனுக்கு என்ன தெரியும்? அவன் மந்திரத்திலே மாங்காய் விழாது!" என்று சடக்கென்று பதில் சொல்லி விட்டுத் தொடர்ந்து அழுதாள் பூஞ்சோலை.

பொன்மணிக்கோ வலியும் கடுகடுப்பும் தாங்க முடியவில்லை. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. எதிரே அறவாழி நிற்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் கூச்சல் போட்டாள்.

அறவாழி, பூஞ்சோலையை நோக்கி "நான் வைத்தியம் செய்யட்டுமா இதற்கு?" என்று கேட்டான்.

"தெரியுமா உங்களுக்கு? எப்படியாவது தேவலையாக்குங்க! கோடி புண்ணியமுண்டு!" என்று கெஞ்சினாள் பூஞ்சோலை.

அவ்வளவு வேதனையிலும், வலியிலும், நரம்புகளைச் சுழல வைத்துத் தலையைக் கிறு கிறுக்க வைக்கும் விஷக் கொடுமையிலும் எப்படித்தான் புன்னகை வந்ததோ தெரியவில்லை பொன்மணிக்கு! காதலின் மகத்துவமே மகத்துவம்!

அறவாழி, கொல்லைப் பக்கம் போய் வேலியோரத்தில் அவசர அவசரமாக எதையோ தேடினான் பிறகு ஒரு செடியிலேயிருந்து பத்துப் பதினைந்து பச்சிலைகளைப் பறித்துக் கொண்டு வீட்டுக்குள்ளே வந்தான் பறித்த பச்சிலைகளைத் தன் வாயிலே போட்டு மென்றான். பொன்மணியின் அருகே வந்து, "காதை இந்தப் பக்கம் திருப்பு!" என்றான். கருத்தையே அவன் பக்கம் திருப்பியிருந்த அவள். தேளை வாழ்த்திக்கொண்டு காதைத் திருப்பினாள். பச்சிலையைக் குதப்பியிருக்கும் வாயினால் அவள் காதிலே பலமாக ஊதினான். அவளுக்கு வலி வேறு—காதிலே ஊதப்படும் கூச்சம் வேறு!

"மந்திரம் ஒண்ணும் சொல்லாமல் பச்சிலைக் காற்றை ஊதினால் மட்டும் போதுமா?" என்று ஆச்சரியத்தோடும் அல்லற்படுத்தும் இருமலோடும் கேட்டார் பொன்னையா!

"பச்சிலை விஷத்தை இறக்க! மந்திரம். பணத்தைக் கறக்க!" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னான் அறவாழி.

காதில் பச்சிலைக் காற்றை ஊத ஊத பொன்மணிக்கு விஷக் கொடுமை சிறிது சிறிதாகத் தணிவது தெரிந்தது. இன்னுங் கொஞ்சம் பச்சிலையை விரலில் வைத்துக் கட்டினான். தேளின் கொடுக்கு பட்ட விரலில் ஏற்பட்ட அந்தப் புதிய ஸ்பரிச உணர்ச்சி, தேகமெங்கும் தென்றல் பட்டதுபோல் பரவிற்று.

அரை மணி நேரத்திற்கு மேலாக சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றது. பொன்மணியின் மேனியில் தோன்றிய வியர்வை வெள்ளம் மறைந்துவிட்டது. விஷக் கொடுமை முழுவதுமே தீர்ந்துவிட்டது. கடுகடுப்பே இல்லை. வேதனை முற்றிலும் அகன்று விட்டது. அதை அறவாழி நன்றாகப் புரிந்து கொண்டான்.

ஆனாலும் அவளை நோக்கிக் கேட்டான், "இப்போது எப்படியிருக்கிறது?" என்று!

"அப்பப்பா! தாங்க முடியவில்லை ... ஆ...அய்யோ! ......" என்று துடித்தாள் அவள். அவள் துடித்த வேகத்தில் அவனும் காதில் ஊத ஆரம்பித்தான். அவசரத்திலும் பரபரப்பிலும் அவன் உதடுகள் அவள் காதின் விளிம்பில் ஒருமுறை பட்டுவிட்டன. இன்னொரு முறை கன்னத்தின் ஓரத்தையே தொட்டுவிட்டன.

"இப்ப எப்படியம்மா இருக்கு?"—சிறிது நேரம் பொறுத்து தாயார் கேட்டாள்.

எப்படியிருக்கு என்பதைத் தாயாரிடம் எவ்வாறு விவரிக்க முடியும்! "மணிக்கட்டுவரையில் கடுக்கிறதம்மா!" என்றாள்.

ஊதல் சிகிச்சை தொடர்ந்து நடைபெற்றது.

"ஊதல் சிகிச்சை" யென ஒருமுறை தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் அறவாழி. ஊதல் — ஊடல் — ஆகிவிட்டால்?...அறவாழிக்கே உடம்பில் புல்லரித்தது. அளவில்லா ஆனந்தம்!

"இப்ப எது வரையில் கடுக்கிறது?"—தாய் கேட்டாள்!

"விரல் வரையில்!" என்றாள் மகள்!

ஊதினான்—ஊதினான்—விடாமல் ஊதினான்!

"சரியாய்ப் போயிற்றா?" என்றாள் பூஞ்சோலை. அரை மனதாக "ஆம், அம்மா!" என்றாள் பொன்மணி. கடைசியில் அந்தத் தேளை அடிக்காமல் விட்டு விட்டோமே என்று தேடத் தொடங்கினாள்; பூஞ்சோலை!

"நல்லவேளை, தப்பியது — நாளைக்கும் வந்து என்னைக் கொட்டாதா?" என ஆவலுடன் உள்ளத்துக்குள் முனகிக் கொண்டாள் பொன்மணி.



தலைவணங்காத் தமிழன்— "பி. பா."

திராவிட இயக்கத்தின் தூண் போன்றவரும், வணங்காமுடி எழுத்தாளர்களின் வரிசையில் தனக்கென ஓர் இடம் அமைத்துக் கொண்டவரும், தோல்வியிற் கலங்கா உள்ளம் படைத்தவனே உண்மையான வீரன் என்ற இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாய் அமைந்தவரும், ஆங்கிலச் சொற்பெருக்காற்றுவதில் புதிய நடை—புயல் நடை கண்டவரும், 'மூச்செல்லாம் திராவிடருக்கே'—என மொழிந்து கொள்கை கொள்கையென முழங்கிக் குன்றென நிமிர்ந்து நின்று குள்ளநரிச் செயல் கடிந்தவரும், நமது குடும்பத்தில் ஒருவருமான பி. பா. அவர்கள் திடுமென மறைந்த செய்தியால் திடுக்கிட்டோம்—தேற்றுவாரற்றுத் தவித்திட்டோம்.

அன்றொரு நாள் ஆச்சாரியாருடன் எதிர் வழக்காடி வெற்றி வாகை சூடிய வீரர் அவர்!

அவர் குரல் கேட்டு ஆரியம் நடுங்கும்!

அதிகார வர்க்கம் ஆட்டங் கொடுக்கும்!

அத்துணைத் திறன்கொண்ட திராவிட மறவர் ஒருவரை இழந்து விட்டோம். சென்னை மாநகரே கண்ணீர் சிந்தியது. நமது கழகக் காளையர் வீர வணக்கம் செலுத்தினர். இறுதிப் பயணத்தில் ஆயிரமாயிரம் பேர் கலந்து கொண்டனர். அவரது குடும்பம், நடுக் கடலில் திசை தெரியா மரக்கலமாகி விட்டது. திராவிடர், தம் பொறுப்புணர வேண்டுகிறோம். தீரர் பாலசுப்பிரமணியத்தின் புகழ் என்றென்றும் நிலைத்திடும் வகை செய்வோம்! வாழ்க அந்தத் தலைவணங்காத் தமிழனின்—தன்மான வீரனின் — பெயர்! வெல்க அவர் தம் கொள்கை!

தஞ்சையின் எழுச்சி...

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

கரம்பை கிருட்டிணமூர்த்தி! வலங்கிமான் சாமிநாதன்! ஆரூர் தில்லைமணாளன், தியாகராசன், டி. பி. டி., ஜெயராமன், துரை, அம்மையப்பன் சோமசுந்தரம், மன்னை அறிவழகன், கமலத்தியாகராசன், கலியபெருமாள், இவர்கள் முயற்சியின் முழுப்பயனே திருவாரூர் மாநாடு! இவர்களுடன் திருச்சி திராவிடப் பண்ணை முத்துவும் சேர்ந்து கொண்டால் சீருடன் மாநாடு நடைபெறக் காரணம் கூறவும் வேண்டுமோ? எழில் ததும்பும் ஓவியக் காட்சி தந்த மாயவரம் ராசனும், அறந்தாங்கி கருணாவும் எவ்வளவு பாராட்டுக்குந்தகுதியானவர்கள். நன்றி மறவாத நடிக மன்னர் கலைவாணர் திருவுருவும், அரசியல் மேதை செல்வம், அழகிரி அண்ணன்-ஆகியோர் எழிலுருவும் அமைத்துத் தந்த வீரய்யா அனைவரின் வாழ்த்தும்பெற்றார்.

கொள்கை வெறியோடு முன் முகப்பும், உள் முகப்பும் அமைத்து மாநாட்டிற்கே தனிச் சிறப்பு சேர்த்த மாயூரம் வைத்யநாதன், குற்றாலம் வைத்திலிங்கம் குழுவினரை காணத் துடிக்காதார் யார்?

வைரத்தை வாரியிறைத்தனரோ — வான் மீன்கள் கூட்டமோ—என வாய் பிளந்து வியப்புக் கொட்டும் அளவுக்கு மின்விளக்கு அமைத்த ராபிக்கு மதிப்புரை நல்காதவர் எவர்?

தொண்டர் படைத் தலைவர்களாம் பேராவூரணி அடைக்கலம், கொரடாச்சேரி நடராசன் இருவரும் ஆற்றிய பணியில் அடையாளம் தெரியாது இளைத்தே போயினர். அவர் தம் தொண்டர் படையோ அத்தனை பேரும் அயர்வில்லாக் காளையர்! அவர்க்கேற்ற இணையிலாத் தலைவர்கள் இருவர்!

"அங்குமிங்கும் இப்படிப் பரபரவென ஓடியாட இவருக்கு எப்படித்தான் உடல் இடந் தருகிறது?" என மூக்கிலே விரல் வைப்பார்கள்; செயலாளர் மன்னை நாராயணசாமி மாநாட்டு வேலைகளைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்க்கும் போது! அளவுகடந்த உழைப்பு அவரைப் பொறுத்த வரையில்!

விளம்பரப் பொறுப்பாளர் நாகப்பன்—ஆரூர் தந்த அருமையான வைரம்! பொறுமைக் கடல்! வயதில் சிறிது முதிர்ந்தவர்—ஆனால் கொள்கை பரப்புவதில் வாலிப உள்ளம்!

நேர்மையின் முனையும் முறியாது—நெறி பிறழாது — செயலாற்றக்கூடிய தங்கமெனத் தஞ்சை மாவட்டத்திற்குக் கிடைத்தவர் அருமைத் தோழர் இளங்கோ! இணைபிரியாது என்னுடனேயே இருந்து மாநாட்டுப் பணிகளை அவர் மேற்கொண்ட விதம் பாராட்டுதற்குரியது! தன்னுடைய மாவட்டம் சிறப்பான மாநாட்டைக் கூட்டிக் காட்ட வேண்டுமென துடியாய்த் துடித்தார்!

இப்படிப்பட்ட துடிப்புள்ள தோழர்களின் துணையோடு முதலில் எடுத்துக் காட்டிய சூழ்நிலைகளோடுதான் திருவாரூர் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் தொடங்கின. மாநாட்டு வேலைகளை கவனிப்பதற்காக ஏப்ரல் திங்கள் பனிரெண்டாம் நாள் திருவாரூர் வந்தேன்.

[தொடரும்]

திட்டங்களின் பித்தலாட்டங்கள் பிரிவினைக்கு உதவும் கருவிகளே!

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் இருக்கிற போக்கை மாற்ற நம்மால் முடியுமா; அதற்கு அவகாசம் இருக்கிறதா; மாற்றத்தைக் காணும் முன் நாம் செத்து விடுவோமா; அதிலே கிடைக்கின்ற பலனிலே நமக்கு பங்கு கிடைக்காமல் போய் விடுமா—என்று ஆருடம் பார்க்கிறவர்கள், மக்களை ஏமாற்றுகின்ற பொதுவாழ்வுக்காரர்கள் என்று நான் அவர்களிடத்திலே பேசுவதுண்டு.

இன்றைய தினம் அகில இந்திய அரசியலிலே இருக்கின்ற மனப்போக்கு சரிதானு என்று யோசிக்க வேண்டுமே தவிர, இருக்கின்ற போக்கிற்கு எதிர்த்த ஒரு போக்கு உண்டாக்குவதுபற்றி சந்தேகப்படுவது கோழைத்தனம் என்று நான் அவர்களிடத்திலே வாதாடுவேன்!

அடுத்து சில பேர்கள் "நீங்கள் பேரம் பேசுவதற்குத்தான் பிரிவினை பிரச்சினையைப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இது எங்களுக்குத் தெரியும்!" என்கிருர்கள்.

"என்னய்யா பேரம் பேசுகிறோம்?" என்ருல், "ஐந்தாண்டுத் திட்டத்தில் உங்களுடைய ராஜ்யத்திற்கு அதிகப் பணம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். கொடுக்காவிட்டால் பிரிந்து போவோம் என்று மிரட்டுகிறீர்கள்!" என்று கூறுகிருர்கள்.

அப்படிச் சொல்லுவோரிடத்தில், "உங்கள் ஐந்தாண்டுத் திட்டம் உதயமாவதற்கு முன்பே, 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கம் தெருவெல்லாம் முழங்கிக் கொண்டிருக்கிறது. 1939—லிருந்தே! நாங்கள் சொல்லி வந்தது எவ்வளவு நியாயமானது என்பதைக் காட்டுவதற்கு உங்களது ஐந்து ஆண்டுத் திட்டத்துப் பித்தலாட்டங்கள் துணை புரிந்திருக்கின்றன என்று சொல்லுங்கள்; நான் ஒத்துக்கொள்ளுவேன். ஆனால், அதிலே அதிக பங்கைப் பெறுவதற்காக திராவிட நாடு பிரச்சினை எழுப்பப் படுகிறது என்று சொல்லுவது உங்களுடைய அறியாமையையே காட்டுகிறது!" என்று நான் சொல்ல அஞ்சுவதில்லை.

இன்னும் சில பேர், நாம் இந்தி மொழி படிப்பதற்கு பயந்துகொண்டு—இந்தி மொழி படித்தால் வட நாட்டுக்காரர்களோடு போட்டி போட முடியாதே என்று அஞ்சிக்கொண்டு—இன்று டெல்லி 'செக்ரடேரியட்'டிலே சென்னை வாசிகள் கொட்டம் அடித்துக் கொண்டிருக்கிருர்களே; அந்த நிலை மாறிவிடுமோ என்ற பயத்தில்-இந்தி கூடாது என்று சொல்லுவதற்காக பிரிவினை கேட்பதாகச் சொல்லுகிருர்கள்.

அவர்களுக்கும் நான் சொல்வேன், "இந்திப் பிரச்சினை என்பது இருக்கின்ற ஒரு வியாதியினுடைய அறிகுறியே தவிர, இதுவே ஒரு வியாதி அல்ல. இந்தியைக் கொண்டுவருவதற்காக துணைபுரிகின்ற அரசியல் சட்டத்தை அறவே நீக்கினுலும் திராவிட நாடு பிரச்சினை இருக்குமே தவிர பின்னுலே போய் விடாது!" என்று.

மக்கள் சபையில் இரண்டே முறைகள்தான் உரையாற்றுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்புகளைப் பெறுவதற்கு முன்பு எனக்கு நிறைய மனப் போராட்டங்கள் இருந்தன. அது அண்ணு அவர்களுக்குத் தெரியும்; நம்முடைய கட்சியிலே இருக்கிற முக்கியமான தோழர்களிடத்திலே அதை எடுத்துரைத்திருக்கிறேன். நான் இங்கிருந்து சென்றேன். செல்லும்போது அண்ணு அவர்கள், "நீ மிகப் பொருமையாக இருக்க வேண்டும்; உன்னுடைய ஆத்திரத்தைக் காட்டக் கூடாது; ஜனநாயகத்திலே காத்திருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்; யாரிடத்திலும் அனுவசியமாக சத்தம் போட்டுக் கொள்ளக் கூடாது!" என்று இரயிலடி வரை வந்து அறிவுரை தந்து விட்டுப் போனுர்கள்.

நான் அங்கு போனதிலிருந்து ஏதாவதொரு விஷயத்தின்மீது பேச வேண்டுமென்று பல முறைகள் முயன்று முயன்று தோற்றுப்போனேன். முடிவில் முதல் சபைக் கூட்டத்தில், கடைசி நாளுக்கு முதல் நாள் தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் வரவு—செலவு திட்டத்தின் கீழ் நடைபெற்ற விவாதத்திற்குப பதில் சொல்ல எழுந்திருந்தார். சபை முழுவதும் கையொலி செய்து அவரை வரவேற்றது. அவரும் தன்னுடைய பேச்சை ஆரம்பித்தார். உடனே நான் எழுந்து நின்று, என்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்தேன். "ஐயா, நான் இங்கு வந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிறது! நான் பேசுவதற்கு இதுவரை பலமுறை முயன்றிருக்கிறேன். எனக்கு வாய்ப்பு தரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இங்கே வந்திருப்பது இரண்டே பேர்கள்தான் என்றுலும், தமிழ் நாட்டினுடைய அரசியலின் எதிர் காலத்தை உருவாக்குகின்ற பெரும் ஆற்றலும், பெரும் உரிமையும் எங்கள் இயக்கத்திற்கு இருக்கிறது. அதை மனதிலே வைத்துக் கொண்டு எங்களை நீங்கள் மதிக்க வேண்டும்!" என்றேன்.

அதற்கு சபாநாயகர் அவர்கள், "தங்களுக்கு இடம் கிடைக்காதது பற்றி நான் வருந்துகிறேன். இருந்தாலும் இங்கே 505 பேர் இருக்கிருர்கள். கொஞ்சம் தாமதமானுல் பொறுத்துக் கொள்ளவேண்டும்!" என்று சமாதானம் சொன்னுர்.

பிறகு அடுத்த சபைத் தொடரில் உள்நாட்டு இலாக்கா மான்யம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த ஒரு வாய்ப்பிலேயே நமது இயக்கத்தினுடைய கொள்கைகள் அத்தனையையும் சொல்லிவிட வேண்டுமென்று நான் விரும்பினேன். அதை நண்பர்களிடம் சொல்லி யோசனை கேட்டபோது, "உங்களுடைய முதல் பேச்சு ஏற்படுத்துகிற எண்ணம் உங்களையும் — உங்கள் வார்த்தைகளையும் இங்குள்ளவர்கள் உணரும்படிச் செய்யும்! அவசரப் படக்கூடாது; பொறுத்துக் கொள்ள வேண்டும்!" என்று சொன்னுர்கள்.

எனது அந்த முதல் பேச்சுக்குப் பிறகு, என்னைப் புறக்கணித்து வந்ததாக நான் கருதிய சபாநாயகரேகூட "இப்படி முதல் பேச்சிலேயே இத்தனை தன்னம்பிக்கையோடு பேசுபவரை நான் இப்போதுதான் சந்திக்கிறேன். உங்களுடைய கழகத்துக்காரர்கள் நன்ருகப் பேசுவார்கள் என்று முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று உங்களைப் பார்த்தேன்; பேச்சைக் கேட்டேன்!" என்று அவர் பாராளுமன்றத்தில் புதிதாக நுழைந்தவருக்குத் தரவேண்டிய உற்சாகத்தைத் தந்தார்.

மேலும், "சம்பத் அவர்களே! சபையில் நான் பல காலமாக சபாநாயகராக இருந்திருக்கிறேன். பேச்சுக்களை மூன்று ரகமாகப் பிரித்து வைத்திருக்கிறேன். சில உறுப்பினர்கள் பேச எழுந்ததும், வெளியே 'காப்பி' குடித்துக்கொண்டிருக்கிற உறுப்பினர்கள்கூட எழுந்து ஓடி வருவார்கள்—இது ஒரு வகை! இரண்டாவது வகை, வெளியிலே இருந்தும் ஒருவரும் வரமாட்டார்கள்; உள்ளே இருக்கிறவர்களிலேயும் யாரும் வெளியே எழுந்து செல்லமாட்டார்கள்! மூன்ருவது தரமான பேச்சு, உள்ளே இருக்கின்றவர்களும் எழுந்து வெளியே சென்று விடுவார்கள்! சாதாரணமாக, புதிய உறுப்பினர்களின் முதல் பேச்சு மூன்ரும் வகையான பேச்சாகத்தான் இருக்கும்! உங்களுடைய பேச்சு ஆரம்பத்திலேயே உள்ளே இருக்கிறவர்களை உட்கார வைத்தது!" என்றெல்லாம் தைரியம் கொடுத்தார்.

அடுத்தபடியாக பல மானிய விவாதங்கள் வந்தபோது நான் பேச முயற்சித்தேன்; வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, நான் சென்னை வந்தபோது அண்ணுவிடம் நிலைமையைச் சொல்லி வருந்தினேன். அண்ணு அவர்கள், "இந்த முறை மீண்டும் டெல்லி செல்கிறபோது முயற்சி செய்; முடியாவிட்டால் வேறு வழிகளைப்பற்றி யோசிப்போம்!" என்று ஆறுதல் சொல்லி அனுப்பினுர்கள்.

நான் மறுபடி டில்லி சென்றபோது அமைச்சர் கேஸ்கருடைய தலைமையில் இயங்கி வருகின்ற செய்தி—போக்குவரத்து இலாக்கா மானியத்திலே பேச அனுமதி கேட்டேன். உடனே அனுமதி கொடுக்கப்பட்டது. நம்முடைய கழகம் இந்த நாட்டிலே பல்லாண்டு காலமாக எதைக்கூறி வந்ததோ—ரேடியோவைப் பற்றியும் சினிமாத் துறையில் இந்த சர்க்கார் செய்கிற அக்கிரமங்களைப்பற்றியும் எதை எடுத்துக் கூறி வந்ததோ — அவைகளில் சிலவற்றைத்தான் நான் அன்றைக்குக் கூறினேன். புதிதான செய்திகள் அல்ல; ஆனுல் அந்த இடத்திலே அதைக் கேட்பவர்களுக்கு விஷயம் புதிதானதாகவும், அதற்குப் பின்னுலே இருந்த ஆத்திரத்தில் வலிவு அதிகமானதாக இருந்ததாகவும் கருதிக்கொண்டார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்ருல், சம்பத்தினுடைய சாமர்த்தியம் எதுவுமே கிடையாது; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைக் கண்ணோட்டம் இருக்கிறதே — அது அங்கே அதிர்ச்சியை உண்டாக்குகிற ஆற்றல் படைத்திருக்கிறது!

அன்று நான் பேசும்போது இடையில் பலர் குறுக்கிட்டுப் பேசினுர்கள். அந்த மான்ய விவாதத்திற்கு வழக்கமாக ஒதுக்கப்படுவது மிகமிகக் கேவலமான நேரம்—இரண்டு மணி நேரம்; அதற்கேகூட ஆள் கிடைக்கமாட்டார்கள். ஆனுல் அன்று மூன்று மணி நேரம் ஒதுக்கியிருந்தார்கள். நம்முடைய கருத்துக்கள் அங்கே பிரதிபலிக்கப்பட்ட உடனே அந்த மூன்று மணி நேரம் போதாது; திடீரென்று சுவை ஏற்பட்டுவிட்டது; இந்த இலாக்காவிற்கு ஒரு மகத்துவம் ஏற்பட்டுவிட்டது; நான்கு மணி நேரம் வேண்டும்; ஐந்து மணி நேரம் வேண்டும்—என்று சபையிலேயே கேட்டார்கள். வழக்கமாக ஐந்து மணி வரையிலேதான் சபை உண்டு; அன்று ஆறு மணி வரையிலே நீடிக்கப்பட்டது!

அந்த விவாதத்திலே முதலில்

[தொடர்ச்சி பக்கம்—11]

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம்

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் **6—6—58** வெள்ளியன்று, காலை **10**-மணிக்கு, சென்னை—நுங்கம்பாக்கம் அவின்யூ ரோடு, **9** எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

—**தலைமைக் கழகம்** (தி. மு. க.)

தஞ்சையின் எழுச்சி!

தஞ்சையின் வீழ்ச்சியை நினைத்து நினைத்து மனமுருகியிருக்கிறோம். எழுதி எழுதிக் கண்ணீர் மல்கியிருக்கிறோம். வரலாற்று ஏட்டினில் ஒரு சோகத் திருப்பமாக தஞ்சையின் வீழ்ச்சி நம்மையெலலாம் தலை தாழ்த்த வைத்திருக்கிறது.

சோழர் குல மாவீரர்கள் உலவிய இடம் — புலிக்கொடி வான் தொட உயர்ந்த இடம்— கலைத் தோட்டமாய் — நெற்களஞ்சியமாய் — செழித்திருந்த இடம்—அந்த இடத்தைப் புகழின் அடிச்சுவடுகூடத் தெரியாமல் புழுதி மேடாக்கிவிட முனைந்தோர் ஏராளம்! ஏராளம்!

வீழ்ந்த தஞ்சை வீழ்ந்ததே தவிர தன் பழம் பெருமையை அறவே அழித்துக் கொள்ளவில்லை. நெஞ்சில் ஈரமும் வீரமுங் கொண்டோர் தமிழர்— அவர்கள் கலை வளர்த்த தரணி தஞ்சை! கலைக் கோட்டத்தை இடித்துத் தகர்த்து தமிழனின் வரலாற்றுச் சுவடிகளை இருட்டு மாளிகையில் வீசி யெறிந்து நான்கு புறமும் வகுப்பு வெறியெனும் அகழ் வெட்டி வாழுகின்ற புதுமையின் பகைவர்கள்—புல்லறிவாளர்கள்— ஒளிக்கீற்று எங்காவது தென்படுமாயினும் அதை அணைத்திடவே ஆள் சேர்ப்பர் என்ற நிலை தஞ்சைத் தரணியை இடைக் காலத்தில் ஆட்டிப் படைத்தது.

அந்த முட்டுக்கட்டையினையும் மீறி முகில் கிழிக்கும் நிலவு போல தஞ்சை பூமியிலே இன உணர்வென்னும் ஒளி பரவிடத் தொடங்கிற்று. அதனைத் துணைக் கொண்டு அரசியல் விழிப்பு ஏற்படலாயிற்று. நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொள்ளத் தருணம் பார்த்திருப்போர் அரசியல் வட்டாரத்தில் அதிகம். அதிலும் காங்கிரஸ் கட்சியில் அமோகம்!

இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைக்கப் போகிறது என்ற ஜாடை தெரிந்ததும், ஜரிகைத் தொப்பிகள் — ஜமீன்கள் — சர்கள் — ராவ்பகதூர்கள் — எல்லாமே எல்லாவற்றையும் உதறிவிட்டுக் காங்கிரசில் இணைந்தன. தஞ்சை காங்கிரசுக்குப் பண பலம் கிட்டியதும் காலந்து பணக்காரர்கள் கையில் காங்கிரசும் தஞ்சையும் தஞ்சம் புகுந்தன. அவர்கள் வைத்ததே சட்டமாயிற்று. அவர்கள் இழித்த கோட்டைத் தாண்டுதற்கு யாரும் துணியார்.

செல்வச் சீமான்களின் பாதுகாப்புக் கோட்டையாக காங்கிரஸ் மாறியதை ஏழை உழவன் கண்டான். அவன் கையிலே நெல்மணியும் — கண்களிலே நீரும்! காங்கிரஸ் போர்வையிலே பண்ணைக்காரர் எது வேண்டுமானாலும் செய்யலாம்—ஏனென்று கேட்க நாதியில்லையே என உழவன் ஏங்கினான்.

அந்தச் சமயத்தில் அவனுக்குக் காட்டப்பட்ட அமைதியான போராட்ட மார்க்கத்தை அவன் ஏற்றுக்கொள்ள உணர்ச்சி இடங்கொடுக்கவில்லை. அவனது உணர்ச்சிக்கு நெய் வார்த்து மேலும் எரியவிட்டு அந்த நெருப்பிலே குளிர் காய விரும்பிய தோழர்கள், "உலகப் பாட்டாளி மக்களே! ஒன்றுபடுங்கள்!" என்ற முழக்கத்தோடு தஞ்சையில் ஒரு சிறிய தெலிங்கானாவை அமைத்துக் காட்டினர்.

பலாத்காரம்—தீ — கொள்ளை —கொலை! இப்படியொரு பயங்கரம், தஞ்சையைக் கப்பிக் கொண்டது!

நேரம் பார்த்துப் பொதுத் தேர்தல் வந்தது. காங்கிரசுக்கு எதிராக எல்லா சக்திகளும் தஞ்சையில் ஒன்றுகூடி நின்றன. பணக்காரர் கையிலேயிருந்த வலிமை குறைக்கப்பட்டது. காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. ஏழை உழவனும், பாட்டாளியும், நடுத்தர மனிதனும் தங்களுக்கு வழிகாட்டக்கூடியவர்கள் கம்யூனிஸ்டுகளே என நம்பினர். நம்பிக்கை சிறிது சிறிதாகத் தேயக்கூடிய பருவம் ஆரம்பமாயிற்று. அடுத்த தேர்தலில் அதன் விளைவும் அறுவடையாயிற்று. இந்த இடைக் காலத்தில் கம்யூனிஸ்டுகளின் சரிவை உற்று நோக்கிக் கொண்டிருந்தவர்கள் — வேறு புறத்தில் மறைமுகமாக காங்கிரசுக்கு ஊட்டம் தரப்படுவதைக் கவனிக்காதிருந்து விட்டனர்.

கம்யூனிஸ்டுகளின் வீழ்ச்சியினாலேயே காங்கிரசுக்கு வளர்ச்சி ஏற்பட்டது என்று கூறிவிட முடியாது. காங்கிரஸ் போன தேர்தலில் ஏற்பட்ட பெருந் தோல்வியை சிந்தித்து தஞ்சை மாவட்டத்து மக்களை மயக்குவதற்கான மாய்மாலங்களில் மறைமுகமாக ஈடுபட்டதின் காரணமாகவே பெரும் வெற்றியை எட்ட முடிந்தது. இரண்டாவது பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடுவதெனத் தீர்மானித்துத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்கும் நேரமின்றி திடுமெனத் தேர்தல் களம் புகுந்தது.

அப்போதெல்லாம் கழகத்திற்குத் தஞ்சையில் போதிய வளர்ச்சியில்லை. கிளைக் கழகங்கள் அதிகமில்லை. பொது மக்களோ, கம்யூனிஸ்டுகளிடம் அதிருப்தி அடைந்து "இவர்களுக்குக் காங்கிரஸ்காரர்களே பரவாயில்லை" யென்று முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். அந்த நெருக்கடியில் வசதிகளற்ற நமது விளக்கவுரைகள் அவர்கள் விழிகளைத் திறக்கவோ, செவிகளில் விழவோ வாய்ப்பில்லாமற் போய் விட்டது. அதனால் தஞ்சையில் கழகத்திற்குக் கணிசமான வாக்குகள் கிடைத்தனவே தவிர, வெற்றிப் பூரிப்பு ஏற்பட வழியில்லாமற் போயிற்று.

அந்தத் தேர்தல் முடிவை மட்டுமே வைத்து தஞ்சை மாவட்டத்துக் கழக வலிவைக் கணக்குப் போட ஆரம்பித்தனர் அரசியல் வட்டாரத்தினர். "தோல்வி" நல்லதோர் விழிப்பை உடனடியாக ஏற்படுத்த உதவியது. ஏமாந்து போய் காங்கிரசை வெற்றி அடையச் செய்து விட்டோம் என்ற ஏக்கம் எங்கெங்கும் எதிரொலித்தது. புதிய உணர்ச்சி—புதிய எழுச்சி—புதிய தெம்பு—புதிய முழக்கம் — இப்படிப் பொங்கி எழுந்தனர் ஊருக்கு ஊர் வீரர்கள்!

சிற்றூர், பேரூர்களில் கொள்கை விளக்கக் கூட்டங்கள்—கிளைக் கழக அமைப்புகள் —கழகத்திற்கென புதிய புதிய கட்டிடங்கள் — கால்கோள் விழாக்கள் — தஞ்சையிலே கழகத்தின் ஒளி, படர்ந்திருந்த இருளைக் கிழிக்க எழுந்தது.

பெரியாரின் திராவிடர் கழகமோ, சென்ற தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெற்றிக்கும் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கும் தானே தலையாய காரணம் என்று பெருமை பேசிக் கொண்டது. எந்தப் பிரச்சாரத்திற்கும் செல்லுகிற 'ஒலி பெருக்கிக் கடை' போலக் கழகம் ஆகிவிட்டதை யெண்ணி திராவிடர் கழகத்திற்குள்ளே பணி புரிந்த நண்பர்களே வேதனைப்பட்டனர். பாலையவனம் துரையரசன் போன்ற திராவிடர் கழகத்

மு. கருணாநிதி

தூண்கள் பெரியாரின் முரண்பட்ட போக்கு கண்டு வெளியேறினர். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் தொகுதி சம்பத், பட்டுக்கோட்டை தொகுதி சீனுவாசன், மந்திரி வெங்கட்டராமன் போன்ற பார்ப்பனப் பிரமுகர்களுக்கு திராவிடர் கழகம் ஓட்டுசேகரித்துக் கொடுத்ததையும்—பின் அதே கழகம், பார்ப்பனர்களை எதிர்த்து ஓரிரு மாதங்களில் ஆரம்பித்த மாபெரும் போராட்டத்தையும் கண்டு வியப்படைந்தவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து கூட்டம் கூட்டமாக வெளியேறினர்.

திராவிடர் கழக, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சார்புடைய விவசாயிகளைத் தட்டியெழுப்பி விழிப்பேற்படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி உருவெடுத்தது. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபாடு கொண்டு அமைதியோடு நடத்தி வெற்றி கண்ட நங்கவரம் உழவர் அறப்போர்! அது திருச்சியிலே நடைபெற்றது என்றாலும், தஞ்சை மாவட்டத்து விவசாயிகளின் கவனத்துக்கு உரியதாயிற்று! வைக்கோற் போர்களுக்கு நெருப்பு மூட்டப்படாமலே—களத்துமேட்டு நெற்குவியல் களவாடப்படாமலே—வீடுகள் தீய்க்கு இரையாகாமலே—நங்கவரம் அறப்போரில் தி. மு. கழகம் வெற்றிக்கொடி நாட்டியது. வெளியேற்றப்பட்ட உழவர்கள் நிலத்திலே மீண்டும் உழைத்திடும் உரிமை பெற்றனர். பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. அமைதியும் கண்யமும் சிறந்து மிளிர, நடந்து முடிந்த நங்கவரத்தால் ஈர்க்கப்பட்டோர் இதுவே எமக்கு ஏற்ற கழகமென அணி அணியாய்ச் சேரலாயினர். மாவட்டத்தின் பல பகுதிகளில் விவசாயிகளின் முன்னேற்ற சங்கங்கள் மலரலாயின.

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர்—திருவாரூர் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர்
என். எஸ். இளங்கோ.

உழவர் அணிவகுப்புடன் போட்டியிடும் வகையில் இளைஞர் அணி வகுப்பு—வாலிபர் வரிசை—கழகத்திற்கு எங்கெங்கும் பெருகிடலாயிற்று. மாவட்டச் செயலாளர் அருமைத் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களின் அரிய அமைப்பு முறைச் செயலால், வட்டச் செயலாளர்களின் ஓயாத உழைப்பால், மாவட்டத்தில் முன்னூறு கிளைகள் தோன்றலாயின ஆங்காங்குள்ள பெரும் பகுதிகளில் ஆர்வமுள்ள கழகக் காவலர்கள் தாங்களே பொறுப் பேற்றுக்கொண்டு தங்கள் வட்டாரத்தைக் கழகத்தின் கோட்டையாக்க வேண்டுமெனச் செய்துள்ள முயற்சிகள் விவரிக்க இயலாதெனலாம்.

இப்படி நாள்தோறும் பெருகி வரும் கழகத்தின் சக்தியை ஒரு சேரக் காணுதல் வேண்டுமென அவாக்கொண்ட மாவட்டக் கழகத்தினர், 3-வது மாவட்ட மாநாட்டினை நடத்திட வேண்டுமெனத் திட்டம் தீட்டினர். முதலிரண்டு மாவட்ட மாநாடுகள், முறையே மாயவரத்திலும், தஞ்சையிலும் நடைபெற்று விட்ட காரணத்தால், இந்த மாநாட்டை எங்கே நடத்துவதென கேள்வி உருவாயிற்று. திருவாரூரில் நடத்த வேண்டுமென நான் வேண்டுகோள் விடுத்தேன். பலரும் தங்கள் தங்கள் ஊரிலேயே நடத்த விரும்பினர். இறுதியில் திருவாரூரே வென்றது.

"ஐயாயிரம் ரூபாய் மிச்சம் காட்டுவீரோ? பத்தாயிரம் காட்டுவீரோ?......" என்றெல்லாம் அன்புத் தோழர்கள் மனதில் களங்கமின்றிக் கேலி புரிந்தனர். மாநாடு நடத்துவதால் கழகத்தின் பிரச்சாரமும்—அதே சமயம் கழகம் நடைபெறுவதற்கு நிதி திரட்டுகிற வேலையும் ஒருங்கே நிகழ்கிறது எனக் கொள்ளலாம். அந்த அளவில் மாநாடு திருவாரூரில் நடைபெறுவது "ஒரு கல்லில் இரு மாங்காய்" என இருக்கும் என்று எடுத்துக் கூறினேன். மாவட்டக் கழகம் அனுமதி தந்தது.

அனுமதி கிடைத்த மறுநாள் சிந்தித்தேன்—திருவாரூரில் மாநாடு நடத்துவதாயின் உள்ளூரில் நிறைய கழகத் தோழர்கள் வேண்டுமே—பார்க்கப்போனால் ஏனைய ஊர்களைவிடத் திருவாரூரில் உழைப்போர் தொகை குறைவாயிற்றே—என எனக்குள்ளே குழம்பினேன். வெளியில் கூறிட சிறிது வெட்கம்!

மாநாட்டு நாள் நெருங்க நெருங்க நானே முன்பு நினைத்தது தவறு என்று புரிந்து கொள்கிற அளவுக்குத் திருவாரூர் தன் உழைப்பை நல்கியது. அடடா......ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் தி. மு. கழகமென்றால் நான்—தென்னன்—விசயராகவன்—சேதுபதி—இவர்கள்தான் ஓடியாடி வேலை செய்யக் கூடியவர்கள். ஆனால்; இன்று?...... எங்கு திரும்பினாலும் இளைஞர் பட்டாளம்; "இதோ வந்தோம்" எனக் கூறிடுகிற காட்சியைக் காணுகிறேன். அப்பப்பா...அவர்கள் ஆற்றிய பணி! பட்டபாடு! வடித்த வியர்வை! திருவாரூர் மாநாட்டுக்கு, மாநில மாநாட்டுச்சிறப்பு கிடைத்திருக்கிறதென்றால் அதற்குத் தோழர்களின் தோள் வலியும் நெஞ்சுறுதியுமன்றோ காரணம்! திருவாரூர்த் தோழர்கள் போதுமோ போதாதோ என்று எங்கெல்லாமிருந்தோ ஆற்றல் மிக்கோர் வந்து குழுமினர். அவர்களின் பெயர்கள் முழுவதையும் எழுதிடத்தான் ஏடு கொள்ளுமோ? இதோ... அவர்களில் சிலர் என் மனக் கண்களிலே தோன்றி விடுதலை விருத்தம் பாடிக் காட்டுகிறார்கள்.

மாநாட்டு முன் செலவுகளுக்குப் பணம் தேவைப்படுமே யென்று கூறி முடிக்கவில்லை நான்; "அதற்கென்ன நான் தருகிறேன் இரண்டாயிரம்!" என உறுதிதந்து அடுத்தநாளே கொண்டு வந்து கொடுத்தது மட்டுமல்லாமல், குவிந்திருந்த பணிகளையும் பங்கு போட்டுக் கொண்ட வாழகக்கரை இராசகோபால்!

"தலைவர்கள் அமர மேடை தானே வேண்டும் உங்களுக்கு? அதோடு நிறுத்துங்கள்-அதற்கு நானுச்சு" எனக் கூறி அழகு மேடை அமைத்துத் தந்த வெங்கிடங்கால் சௌரிராசன்!

"மாநாட்டுப் பந்தலை அழகுபடுத்த வேண்டுமா? மா, பலா, வாழை என்ற முக்கனி மட்டும் போதுமா? போதாதா? ஆமாம்; போதாதுதான்—இதோ பாருங்கள், நாங்கள் தொங்கவிடும் மலர்க் கொத்துக்களை! பாக்குக் குலைகளை! ஈச்சங் குலைகளை! பனங் குலைகளை! செவ்விளநீர்க் குலைகளை! இன்னும் போதவில்லையா? இதோ, நெல் முத்துக்களைக் கோர்த்த சிங்காரத் தொங்கல்! கதிர்களை இணைத்த தோரணம்! இன்னும் பாருங்கள்; வாழைத்தோட்டத்தையே உற்பத்தி செய்து காட்டுகிறோம்" எனச் செயல் மூலம் விளக்கி சிந்தை தொடும் அலங்காரங்களைச் செய்த டாக்டர் விசயராகவன், சதாசிவம்!

"கோடைகாலமென மலைத்திட வேண்டாம்-தண்ணீருக்கு நான் பொறுப்பு" என முன்வந்து பொறுப்பினை அக்கரையுடன் செய்து முடித்த சேதுபதி! அவருக்கு உறுதுணையாக இருந்து சுழன்று பணியாற்றிய 'உதய சூரியன்' படிப்பகத்து நல் இளைஞர்கள்!

"மரம் நட வேண்டுமா? தட்டியைத் தலையில் தூக்கிச் செல்ல வேண்டுமா? டாக்டர் உத்தியோகம்—அந்த மதிப்பெல்லாம் பிறகு இருக்கட்டும்-எல்லாம் நானே செய்கிறேன்" என்று அமைதியோடுஉழைத்து ஊராரின் பாராட்டுதலைப் பெற்ற டாக்டர் தண்டபாணி!

சமர்க்களப் பாண்டியன் போல நடந்துகாட்டி, சௌந்தர பாண்டியனைப் போல கொள்கை தேக்கி அயராது பாடுபட்ட சமரசபாண்டியன்!

சந்தனந்தான் அறைக்க அறைக்க மணம் பெறுதல் போல் உழைக்க உழைக்க உற்சாகம் கொள்ளும் வீரர்—ஒவ்வொரு சிறப்பிலும் அவருக்குப் பங்குண்டு—அவர்தான் வெங்கிடங்கால் சந்தானம்! தன்னூரில் கழகத்திற்கென மூவாயிரத்தில் கட்டிடம் அமைக்கின்ற தோழர்!

"என்ன அத்தான்! பந்தல் வேலை முடியவில்லை" எனக்கூற, பறந்து சென்று பதினைந்து ஆளோடு வந்து பகலிரவு தூங்காது பந்தலை முடித்துத் தந்த கோமல் வெங்கட்டராமன்!

"உணவு உறக்கமெல்லாம் பந்தலிலேதான்—ஒழுங்காக மாநாடு முடிந்தால் போதும்" எனக் கூறி ஒரு துளி மழை விழுந்தால் இரண்டு துளிக் கண்ணீர் விட்ட பெருந்தகையாம் ராசசந்தானம்!

கழகத்திற்கு உழைத்திடவும் தெரியும்—கடமைதனைத் தவறுமல் செய்கின்ற வேலையும் எனக்குப் புரியும்—எனச் சொல்லாமற் செயல் புரிந்த கருணை ஜமால்!

கனிவகையும் கற்கண்டுப் பொங்கல் வகையும் களிப்பு தரும் வகையினிலே வழங்கியதோடு, காட்டூரில் கழகத்துக் கட்டிடத்தை திறக்கின்ற விழாவினையும் திறம்படவே செய்து முடித்த தித்திக்கும் மொழியாளர்—திறமை மிக்குடையார்—கே. வி. ராமய்யா!

அஃதேபோல் விருந்தளித்தார் ஒரு நாள், ஆரூர் கல்யாண சுந்தரனார்!

கனிவகைக்கு எதிர் வகையாய்க் கறி வகையில் உணவு படைக்கின்றேன்—இதனை விடச் சுவையாக நாயன விருந்தும் அளிக்கின்றேன்—எனச் சொன்னார்—தலைவர்களை மகிழ்வித்தார்—தமிழ் நாட்டு இசைப் பெருங்கோ குளிக்கரை பிச்சையப்பா!

உடல் நலங் குன்றியிருந்தாலும் உடன் பிறப்பு போன்றவரே—உமது ஆசைதீர மாநாட்டு வெற்றிக்கு உழைத்திடுவேன்—கவலை வேண்டாம் எனப் பம்பரம்போல் சுற்றிய பழைய நாள் தோழன்—தென்னன்!

"உணவு கூட தேவையில்லை-உறக்கமெனும் பெருந் தொல்லையும் மாநாடு முடியும்வரை எனக்கில்லை-ஓய்வு நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்! எனக்கு நல்ல உடல்" என நவின்று முப்பது நாள் எனைப் பிரியாதிருந்த கருணானந்தம்!

அவரனையார்: அருமைக் காந்தி! அன்பு சக்தி! அலுப்பின்றித் தொண்டு செய்த பராங்குசம்! அலுவலகத்தில் பேனாவுங் கையுமாய் அமர்ந்திருந்து பிரதிநிதி—வரவேற்பாளர்—கணக்குதனை ஒழுங்காக வைத்திருந்த பொறையாறு ஜம்பு! பொறுமையாளர்! ஏற்றாற்போல் ஏறும்பென உழைக்கின்ற தோழர் இராசன்!

இரவெல்லாம் பந்தலுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு அத்திப்புலியூர் ராமதாசு, ராசமாணிக்கம், பிச்சையயன், சங்கரன், தங்கவேலு—தி. மு. க. சிங்கங்கள்! காலை மாலை நாகையினின்றும் கடமையாற்றிடத் துடித்து வந்திடும் காளையர் பட்டியல் களிப்பைக் கொட்டும்! களைப்பை விரட்டும்! செயல் புரியும் ராமன்! சிரித்த முக ராமு! பழைய நண்பர் பாப்பையன்! பாட்டாளியின் தோழன் பெருமாள்! இவரெல்லாம் மாநாட்டுச் சிறப்புக்குத் துணை நின்றோர்.

மாயூரம் கிட்டப்பா! மாநாடு வெற்றிக்கு என்ன வேண்டுமோ அட்டியின்றிச் செய்து தந்தார்! குடந்தை பத்மநாபன்! குருவிக்

[தொடர்ச்சி பக்கம்—7]

'ஏக இந்தியா' என்ற வாதம்-ஒரு ஏகாதிபத்திய மோசடி வித்தை!

[8—ம் பக்கத் தொடர்ச்சி]

கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த தோழர் குமாரன் என்பவர் பேசினார். நான் இரண்டாவதாகப் பேசினேன். எனக்குப் பின்னால் 10, 12 பேர் பேசினார்கள். பேசிய ஒவ்வொருவரும் திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய கருத்தை எடுத்து ஒட்டியே பேசினார்கள்!

நம்முடைய கருத்து புகுந்தால் அங்கே அச்சம் ஏற்படுகிறது! நம்முடைய கருத்து அங்கே செல்லாத வரையில் அது சாமான்யமானதாகக் கருதப்படலாம்; எடுத்துச் சொல்லப்பட்டால், அத்தனை பேருடைய கவனத்தையும், விருப்பத்தையோ, வெறுப்பையோ—ஆத்திரத்தையோ, அச்சத்தையோ—அசாத்திய விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டுமென்கிற எச்சரிக்கையையோ உண்டாக்குகிறது.

ரேடியோ பொது மக்களுக்கு—பொது நோக்கோடு பயன்படுத்தப்படுகிற சாதனமாக இல்லாமல், காங்கிரசின்பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துகிறார்கள்—என்பது எனது குற்றச்சாட்டுகளில் ஒன்று.

அடுத்தபடியாக, சினிமாப் படமெடுக்கிறார்கள். அத்தனையிலும் காங்கிரஸ் மாநாடுகளும், காங்கிரஸ் தலைவர்களுடைய திக் விஜயங்களும்தான் இருக்கிறதே தவிர, ஏன் நமது மாநில மாநாட்டிலே ஐம்பது அடி எடுத்துக்காட்டியிருக்கக் கூடாது? டெல்லியிலே இரண்டு இலட்சம் சீக்கியர்கள் ஆண்களும் பெண்களுமாக ஊர்வலமாக வந்தார்களே; அதில் ஒரு ஐம்பது அடியை ஏன் படமெடுத்துக் காட்டியிருக்கக் கூடாது? 'கேமரா' முழுவதுமே நேருவினுடைய அந்தப்புறத்திலேயே—காங்கிரசின் மந்திராலோசனை மண்டபத்திலேயே இருக்கிறதே; இது முறையா என்று கேட்டேன்.

சர்க்காரை ஆதரிக்கின்ற ஏடுகளுக்கு மட்டுமே அரசாங்க விளம்பரங்கள் தருவதையும் நான் கண்டித்தேன்.

இன்னொன்று, 'விவித் பாரதி' என்ற வானொலிநிகழ்ச்சி சென்னையிலேயும் பம்பாயிலேயும், மிக சக்திவாய்ந்த இயந்திரங்களைக்கொண்டு ஒலிபரப்பப்படுவதை அறிவோம். இவை இரண்டும் தினம் ஐந்து மணி நேரம் இந்தியிலே நிகழ்ச்சிகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இவை தேவைதானா? ஏன் தென்னாட்டு மொழிகளில் ஒரு நிலையம் வேலை செய்யக் கூடாது—என்று கேட்டேன்.

அன்றைய தினம் மந்திரி அதற்கு மழுப்பினார். ஆனால், பின்னால் பலன் இருந்தது.

மாலை, தமிழ்ச் செய்தி அறிக்கையில், அன்று பாராளு மன்றத்தில் பேசியவர்களில் நான்குபேரது பெயரைச் சொன்னார்களாம். அதிலே என் பெயரையும் சொல்லியிருக்கிறார்கள்; மனக் கசப்போடுதான்; ஆனால் பயத்தோடு!

மேலும், இப்போது வருகின்ற செய்தித் திரைப் படங்களை நான் பார்க்கிறேன். இன்னும் நம்முடைய மாநாடுகளைப் படமெடுத்துக் காட்ட தாராளமும் தைரியமும் அவர்களுக்கு வரவில்லையானாலும், ஏதாவதொரு தென்னிந்திய நிகழ்ச்சி வலிந்து இடம் பெறுகிறது.

நான், ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நம்முடைய சொற்கள் வெறும் ஒலிக் குறிப்புகளாக மட்டுமல்ல; செயலாற்றும் ஆற்றல் கொண்டுமிருக்கின்றன!

அடுத்தபடியாக காங்கிரஸ் ஸ்தாபனத்தை—அதன் மூலஸ்தானத்தை — மூலவர்களை — மிகப் பக்கத்திலேயிருந்து தெரிந்து கொள்ளுகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம்.

காங்கிரஸ் ஒரு வகுப்பு வாத ஸ்தாபனம்; அதில் ஜாதி வெறி தலை தூக்கி ஆடுகின்றது; பதவி வெறி அங்கிங்கெனாதபடி எங்கும் தாண்டவமாடுகிறது! இப்படி யார் சொன்னது? நேருபிரான் அவர்கள்தான்!

இதை மாற்றுவதற்கு, தான் விலகிப் போனால் தவிர வேறு வழியில்லை என்றும் சொல்கிறார். காங்கிரசினுடைய நிலையை அவர் ஓரளவு படம் பிடித்துக் காட்டினார். பண்டித நேருதான் பதினொரு ஆண்டு காலம் பிரதம மந்திரியாகப் பதவி வகித்து விட்டார்; இன்னும் அவரது இளமை மங்காது இருக்கிறதே; ஆண்டுகள் பலவானாலும்! எத்தனை நாட்கள் அவரைப் பார்த்தே நாங்கள் பரவசப்படுவது? கொஞ்சம் விலகி......கொஞ்சம் எங்களுக்கும்...!" என்ற ஆசை இன்று எல்லோருடைய உள்ளத்திலும் தோன்றிவிட்டது. அந்த எண்ணத்திற்குப் பின்னால், அதற்குப் பிறகு யார் என்பதில் அவர்களுக்கு அபிப்பிராய பேதம் இருந்தாலும், அவர் போய்விட வேண்டுமென்ற எண்ணம் பலப்பட்டுவிட்டது! அவர்களை மிரட்டவே பண்டித நேரு கட்சிக் கூட்டத்திலே அதுமாதிரிப் பேசினார். நான் வெளியே போனால் எதை எதைப் பேசுவேன் என்று இப்போது பொதுவாகத் தெரிந்து கொள்ளுங்கள் என்பதற்குத் தான் அந்த ஜாடை காட்டினார்.

'அந்த நிலைமை மாறுகிறவரை இன்னும் கொஞ்சநாள் இருந்துத்தொலை' என்பதுபோல் உட்காரச் செய்திருக்கிறார்கள். ஆனால் மிகச் சாமான்யர்கள் தான் —சத்தியநாராயண் சின்கா, டாக்டர் சுப்பராயன், மகாவீர் தியாகிபோன்றவர்கள் தான் அவரது வெளியேற்றத்தை விரும்பாது பேசினார்களே தவிர, பண்டித பந்த் வாயைத் திறந்தாரில்லை! மொரார்ஜி தேசாய் போன்ற பெரிய தலைவர்கள் "போகாதே! போகாதே!" என்று தடுக்கவில்லை!

மற்றொன்று, நாம் மட்டும் தான் விடுதலை பெற வேண்டும்; இந்திய யூனியன் என்பது ஏகாதிபத்திய மோசடி வித்தை-என்ற எண்ணம் நமக்கு மட்டும்தான் இருக்கிறது என்று கருதிக் கொண்டிருந்தோம். இன்று அந்த எண்ணம் வங்கத்திலே வேர் விட்டுக் கொண்டிருக்கிறது. மாராட்டியத்திலே பெரும் மரமாகவே வளர்ந்து விட்டிருக்கிறது! சம்யுக்த மகாராஷ்டிரத்தின் முக்கியத் தலைவரான ஜோஷி நம்முடைய இயக்கத்தைக் குறிப்பிட்டு, "பம்பாயைத் தலைநகராக வைத்து மாராட்டியத்தைப் பிரிக்கா விட்டால், தெற்கே திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைக் கேட்பதுபோல், நாங்களும் முழுச் சுதந்திர மராட்டியத்திற்குப் போராடுவோம்!" என்று எச்சரிக்கை விடுத்தார். நம்முடைய மாநாடுகளிலே கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். கோவை மாவட்ட மாநாட்டிற்கு அவர்களை அழைத்து வருவதாகவும் நான் சொல்லி இருக்கிறேன்.

இன்னொரு தோழர், "ரவீந்திரநாத் தாகூர் ஒரு கவிஞர் மட்டுமல்ல; ஒரு தீர்க்கதரிசியாகும்! தேசிய கீதம் இருக்கிறதே 'ஜன கன மண' என்ற பாடல், அதை கவனித்திருக்கிறீர்களா? 'பஞ்சாபு சிந்து குஜராத்த மராட்டா திராவிட உட்கல வங்கா' என்ற இதைத் தான் அவர் இந்தியா என்று குறிப்பிட்டிருக்கிறார். இன்று இந்தியாவை ஆட்டிப் படைக்கின்ற உத்தரப் பிரதேசத்தையும் பீகாரையும் காணவில்லை பார்த்தீர்களா? தாகூர் குறிப்பிட்டிருப்பது இவை எல்லாம் தனித் தனி நாடாகப் போய் விடும்; இந்தியா என்று கட்டிக் கொண்டு மாரடிக்க வேண்டிய கருமத்திற்கு ஆளானவை அந்தப் பாடப்படாத பகுதிகள் தான்!" என்று புது வியாக்யானம் தந்தார்!

இந்தியா ஒன்றுதான் என்ற பண்டிதருடைய போலித் தத்துவத்திற்கு மிகுந்த ஆதரவு வேறு மாநிலங்களில் இருப்பதைக் காணோம்! இந்தியாவை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்ற இந்தி வெறி பிடித்த மாநிலங்கள் மட்டுமே அமைதியாக இருக்கின்றன! உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம்—ஆகிய மாநிலங்களில் பிரச்சினை இல்லை! மற்ற மாநிலங்களில் இந்த சர்க்காருக்கு கொடிய தலைவலி காத்துக் கொண்டிருக்கிறது!

தமிழ் நாட்டிலிருந்து அங்கு வந்திருக்கின்ற காங்கிரஸ் நண்பர்களுடைய நிலை என்ன? அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயல் முறைகளைப் பாராட்டத்தான் செய்கிறார்கள். ஒரு மாஜி மந்திரி—புதிதாக ராஜ்ய சபைக்கு வந்தவர்—காங்கிரஸ் நண்பர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு சொல்கிறார், "தெரியுமா சேதி? இப்போது சுப்பிரயம் மிக அழகாகத் தமிழ் பேசுகிறார். அண்ணாத்துரையினுடைய பயிற்சிதான் காரணம்!" என்று, தனது முதல் செய்தியாக!

அவர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் அகில இந்தியா என்பது ஒரு அரசியல் மோசடி என்பது மட்டும் தெரியும். அது பதவி தந்திருக்கிற காரணத்தால் மௌனம் சாதிக்கிறார்கள்; அது நீடிக்க வேண்டும் என்பதற்கு வாதம் புரிகிறார்கள்.

அண்ணா அவர்கள் சட்ட சபைக்கு சென்ற உடனேயே ராஜதந்திரத்தால் பாடம் கொடுத்தார்கள், அவர்களுக்கு. "டெல்லி சர்க்காரிடத்திலே காரியம் சாதித்துக் கொள்ளத் தெரியவில்லை உங்களுக்கு. நாங்கள் சட்டசபைக்கு வந்திருக்கிறோம்; டெல்லியில் சொல்லுங்கள், நீங்கள் தராவிட்டால் அவர்கள் மானத்தை வாங்குவார்கள்; முன்னேற்றக் கழகம் வளர்ந்துவிடும் என்று பயமுறுத்தி வாங்கி வாருங்கள்!" என்று பாடம் தந்தார்கள்.

அண்ணா அவர்கள் வளருவார்கள் என்று சொல்லி மிரட்டுங்கள் என்றார்கள். அவர்கள் அதையும் மீறி, "அடுத்த தேர்தலில் மந்திரி சபையே அவர்களுடையது; இந்தி மொழி விஷயத்தில் அதைச் செய்யாவிட்டால், அண்ணாத்துரை முதல் மந்திரியாகி விடுவார்! அப்புறம் குறை சொல்லிப் பயன் இல்லை! கேரளாவுக்கு அடுத்தது தமிழ்நாடு தான்!" இப்படி மந்திரிகள் முதல் அதி

[தொடர்ச்சி பக்கம்—12]

தயாராகிறது, மலிவுப் பதிப்பு!

* திராவிடத்தின் தேன் சொட்டும் இலக்கியம்!
* தமிழகத்துக் கலையின் கருவூலம்!

கருணாநிதி
மேடைத்தமிழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

200 பக்கங்களுக்குமேல். விலை ரூ. ஒன்று.

விபரங்களுக்கு:
மக்களாட்சி அலுவலகம்,
குழித்தலை (திருச்சி மாவட்டம்)

இடுகாட்டில் பி. பாலசுப்பிரமணியம் அவர்களின் உடலுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாலை அணிவித்தபோது எடுத்த படம்!

அவர்களும் நாமும்!

★

"இரண்டு செய்திகளை ஏடுகளில் படிக்கிறோம்; அரசியல் பழுக்கம் தாங்க முடியாமல் பண்டித நேரு ஓய்வு எடுப்பதற்கு குலு பள்ளத்தாக்கிற்குப் போகிறார்—நமது நாவலர் நெடுஞ்செழியன் கழகப் பிரச்சாரத்திற்காக கோடைக்கானல் மலைக்குப் போகிறார்—இது எதைக் குறிக்கிறது? காங்கிரஸ் பள்ளத்தாக்கிற்குப் போய்க் கொண்டிருக்கிறது; தி. மு. க. மலையுச்சி நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத்தானே!"

—மு. கருணாநிதி

சென்னை, ஏகாங்கிபுரம் கூட்டம் (20-5-58)

திருவாரூர் மாநாடு சிறப்பு மலர்.

★

அறிஞர் அண்ணா அவர்கள் ஆரூர் மாநாட்டில் கழகத்தின் நடவடிக்கைகள்—நிகழ்ச்சிகள் — அனைத்தும் என்றென்றும் நிலைத்திருப்பதுபோலவும், ஏனையோர் உணர்ந்து கொள்ளவும் ஏற்ற வகையில் தொகுத்தளிக்கப்படுதல் வேண்டுமெனச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அதனையொட்டி முரசொலி வெளியீடாக திருவாரூர் மாநாட்டுச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட முடிவு செய்திருக்கிறோம்.

அதில்:

★ கிளைக் கழக விபரங்கள்—கிளைக் கழக செயற் குழுவினர் பெயர்கள்—இடம் பெறுகின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் உடனடியாக தத்தமது விபரங்களை அளிக்க வேண்டுகிறோம்.

★ மாநாட்டிற்கு அலங்கார வண்டிகள் அமைத்து வந்த கழகங்களின் விபரங்களும் தேவைப்படுகின்றன.

★ நிதிக் கூட்டங்கள் நடத்திய ஊர்களின் விபரமும் தேவைப்படுகிறது; வெளியிடுவதற்காக!

★ தனி நன்கொடை அளித்த கழகங்களின் பெயர்களும் மலரில் இடம் பெறுகின்றது; பாராட்டுதலோடு!

★ இதுவரையில் வெளிவராத புகைப் படங்கள் பல இடம்பெறுகின்றன. திரைப்படம் எடுக்கப்பட்ட "பிலிமி"லிருந்து தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிழற் படங்கள் மலர் முழுதும் திகழும். மற்றும் புதிய நிழற் படங்கள் அனுப்பி உதவுவோர் விரைவில் அனுப்பி வைத்தால் நலம்.

★ மூவண்ண முகப்பு—புதிய கட்டுரைகள்—கவிதைகள்—அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர், கழக முன்னணி வீரர்கள் தருகின்ற மாநாட்டுப் பாராட்டுரைகள்!

★ இன்னும் தோழர்கள் எழுதியனுப்புகிற சுவைமிக்க மாநாட்டு நிகழ்ச்சித் துணுக்குகள்!

இத்தனை சிறப்புடன் ஜுன் முதல் வாரத்தில் வெளிவருகிறது!

விலை 8 அணா

(கழிவு 25 சதவிகிதம்)

[விற்பனையாளர்கள் உடனே தேவைக்கு கழிவு நீங்கிய முன்பணத்தை அனுப்ப வேண்டுகிறோம். தனிப் பிரதி தேவையானோர் 60 புதுக் காசுகளுக்கு தபால் தலைகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

-நிர்வாகி, முரசொலி

நாவலர் பேச்சு...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

பின்லாந்து, வெறும் காகிதப் பூக்களை மட்டும் செய்து உலகத்திற்கு அனுப்பி தனியாக வாழ முடிகிறது!

பாகிஸ்தான், வட இந்தியா—இவை பெற்றிருக்கிற கடற்கரைத் துறைமுகங்களைவிட நாம் கேட்கின்ற திராவிடத்திலே அதிகம்! விசாகப்பட்டிணம், ஜிங்கிலிப்பட்டணம், மசூலிப்பட்டணம், காக்கிநாடா, சென்னை, பாண்டிச்சேரி, கடலூர், காரைக்கால், நாகை, தரங்கம்பாடி, தனுஷ்கோடி, தூத்துக்குடி, திருவனந்தபுரம், குளச்சல், கொச்சி, தலைச்சேரி, மங்களூர்—போன்ற இத்தனை துறைமுகங்களும் திராவிடத்திலே உண்டு. இவைகளிலிருந்து ஏற்றுமதி, இறக்குமதியின் மூலம் கிடைக்கின்ற வருமானம் மட்டும் 33 கோடி ரூபாயாம்! அந்தப் பணம் அப்படியே வாய்க்கால் வெட்டப்பட்டு அதிலே ஓடி டெல்லியிலே போய் விழுகிறது!

தென்னகத்திலே மட்டும், இந்திய உற்பத்தியிலே தொண்ணூறு பங்கு காப்பிக் கொட்டை விளைகிறது! அதற்குப் போடுகின்ற வரி போய்ச் சேருகிற இடம் டெல்லி!

இந்தியாவிலேயே மிளகு ஏற்றுமதி செய்யப்படுகிற இடம் தெற்கேதான், ஆண்டு ஒன்றுக்கு 21 கோடி ரூபாய்க்கு! அதற்குப் போடுகிற வரி போய்ச் சேருகிற இடம் டெல்லி!

ஏலக்காய், கிராம்பு, தேக்கு ரப்பர், யானைகள் — இவைகள் எல்லாம் இங்கேதான்!

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள், "இந்தியத் துணைக் கண்டத்திலேயே வெளி நாட்டு நாணயச் செலாவணிக்கான பொருள்களை உண்டாக்குகிற நாடே தென்னாடுதான்!" என்று!

வடக்கே இருக்கின்ற ஒன்றே ஒன்று; வங்காளத்தில் கிடைக்கிற சணல்! அதிலும் பாகிஸ்தானில் பெருப் பகுதி சேர்ந்து விட்டது!

இப்படி எல்லா வளங்களும் கொண்டிருக்கிற திராவிடம் தனியாக வாழ முடியாதா? ஃ

சம்பத் பேச்சு...

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

காரிகள்வரை நம்மைச் சொல்லித்தான் அங்கே உட்காருவதற்கே இடம் வாங்க வேண்டியிருக்கிறது!

அடுத்தாற்போல், இன்றைய தினம் வட இந்தியப் பத்திரிகைகள் அனைத்துமே நமது பிரச்சினைகளில் கவனம் செலுத்துகின்றன. பிடிக்காவிட்டாலும், அருவருப்பு இருந்தாலும், போடப்படுகின்ற விஷயங்களில் பெரும்பாலும் தவறு இருந்தாலும், நம்மைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் அவசியம் வந்து விட்டதாகக் கருதுகிறார்கள்.

"டெல்லி டைம்ஸ்" என்று டெல்லியிலிருந்து வருகிற வாரப் பத்திரிகை, வாரம் தவறாது நம் கழகத்தைப்பற்றியும், நமது அண்ணாவைப் பற்றியும் எழுதிக் கொண்டிருக்கிறது. இப்போது ஒரு பெரிய தொடர் கட்டுரையே எழுதி வருகிறது.

இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன? திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசியலிலே நிலைபெற்று விட்டது என்பதைத்தான்! நம்மைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கண்களைத் துடைத்துக்கொண்டு உற்றுப் பார்க்கிறார்கள். தெரிந்துகொள்ள முடியவில்லையே என்று வடக்கே இருக்கிற அரசியல் பண்டிதர்கள் ஆயாசப்படுகிறார்கள்!

பெரிய புயல் வீசிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே நாம் தமிழ் நாட்டிலே ஒரு விளக்கேற்றி வைத்தோம்! அது அணைந்துவிடுமோ என்றுகூட அங்கலாய்த்துக் கொண்டிருந்தோம்! ஆனால், அது இன்று குன்றின் மேலிட்ட தீபமென உலகமெல்லாம் தெரிகிறது! தெரிவது மட்டுமல்ல; உலகத்தின் பார்வையையே தன் பக்கத்தில் இழுத்து வருகிறது!

அந்த இயக்கம் வளர—மேலும் மேலும் வளர—வளருவதோடு உலகமும் நம்மைப் பற்றி நன்கு உணர இது போன்ற மாநாடுகள் வழிகாண முடியும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு